www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

The EelaBhoomi

# ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

அன்பளிப்பு U.K. 40p Germany: 2.00DM, France: 5FF, Swiss: 2SF, Canada: 1.25Ca$

ஆண்டு 1 வாரம் 1 18-10-1991 வெள்ளிக்கிழமை

## அடுத்த இதழில் .............

1992ல் ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்பு உருவாகும் போது அகதிகளுக்கு என்ன நடக்கும்? இதுவரைகாலமும் குடிவரவுச் சட்டத்தில் மட்டும் ஏற்பட்ட மாற்றம் 1992ல் இருந்து அகதிகள் பிரிவில் மட்டும் ஏற்படுகிறது. இது தொடர்பாக இலங்கைத் தமிழ் அகதிகளின் நிலை என்னவாகிறது?

விசேட கட்டுரை அடுத்த இதழில். உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

# வடமராட்சியை விட்டு வெளியேற உத்தரவு!

## கூட்டுப்படைத் தலைமை அதிகாரியின் அறிக்கை

வடமராச்சிப் பகுதியில் வாழும் அனைத்து மக்களையும் அவர்களுடைய வதிவிடங்களை விட்டு வெளியேறி பொது இடங்களில் தஞ்சம் புகுமாறு பாதுகாப்பு தலைமையகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நமது நிருபர்

மேற்படி அறிக்கையானது கூட்டுப்படை தலைமையக அதிகாரி கேர்ணல் சரத் முனசிங்காவினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகும் அரசின் முன்மாதிரி இது என கூறப்படுகின்றது.

வெகு விரைவில் நடைபெறப் போகும் இத்தாக்குதல் தொடர்பாக அப்பகுதி மக்கள் பீதி கொண்டுள்ளார்கள். இது தொடர்பாக உடனடியாக நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளித்த முனசிங்க மேலும் கூறியதாவது:

மேற்படி நடவடிக்கை ஒரு பாதுகாப்பு நடவடிக்கையே தவிர வேறு எந்த உள்நோக்கத்தையும் கொண்டதல்ல என்று குறிப்பிட்டார். தாக்குதல் எப்போது ஆரம்பமாகும் என்று கேட்ட போது அப்படி தாக்குதல் நடத்தும் யோசனை இல்லை என்றும், இராணுவ இரகசியங்களை தான் வெளியிட மாட்டேன் என்றும் குறிப்பிட்டார்.

இது இவ்விதமிருக்க புலிகள் தரப்புச் செய்தி ஒன்று வவுனியா, தீவுப்பகுதிகள், பலாலி ஆகிய இடங்களில் அரசு இராணுவத்தை குவித்து வருவதாயும் இது மக்களை கொன்று குவிக்க மேற்கொள்ளும் நடவடிக்கை என்றும் கூறுகின்றது. இச்செய்தியில் மேலும், வடபகுதியில் நடந்த தாக்குதல் ஒன்றின் போது 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

## கொக்குத் தொடுவாய்த் தாக்குதலில் 27 இராணுவத்தினர் பலி

18ம் திகதி கொக்கிளாய் வடக்குப் பகுதியைச் சேர்ந்த கொக்குத் தொடுவாய் என்னும் இடத்தில் புலிகளுக்கும் இராணுவத் திற்கும் இடையில் நடந்த மோதலில் 27 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கொக்குத் தொடுவாய் பகுதியில் இருந்த புலிகளின காம்ப ஒன்றை அழிக்கும் முயற்சிக்கு இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலின் போது இரு பகுதிக்கும் இடையில் பலத்த மோதல் ஏற்பட்டது மணிக்கணக்காக நடந்த மோதலில் இரு பகுதியிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

இத்தாக்குதலின் முடிவில் புலிகளின் முகாம் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளது. தகர்க்கப்பட்ட முகாமில் புலிகளின் 33 உயிரற்ற சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் 'அருண் கிரணைட்டு'க்கள் உட்பட பல ஆயுதங்கள், மற்றும் வெடி மருந்துகள் கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார். இத்தாக்குதலின் போது இராணுவத்தில் 33 பேர் காயமுற்றதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

## மொட்டந்தலையர்களின் அட்டகாசம் கால் இழந்த தமிழ் வாலிபர் வைத்திய சாலையில்

ஜேர்மனி

இலங்கையிலிருந்து அகதியாக ஜேர்மனி வந்து தஞ்சம் புகுந்திருக்கும் ஒரு இளைஞர் ஜேர்மனி இனவாத கும்பல் ஒன்றினால் படு மோசமாகத் தாக்கப்பட்டார். கடந்த வாரம் நடைபெற்ற இந்த திகிலூட்டும் சம்பவம் பற்றி பல தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மேற்படி சம்பவம் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை (11-10-91) அன்று சார்புறூக்கன் என்னும் இடத்தில் இடம்பெற்றது வெளிநாட்டவர் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வரும் இந்நாட்டில் பல இப்படிப் பட்ட சம்பவங்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தாமலே போய்விடுவதாக அறியப்படுகிறது. ஜேர்மனி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கும் இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

சங்கரன் ராதாக்கிருஷ்ணன், 26, என்ற தமிழ் இளைஞர் கடந்த வருடம் அகதியாக ஜேர்மனி வந்திருந்தார். அவர் மத்திய சார்புறூக்கன் பஸ் நிலையத்தில் பஸ் வண்டிக்காக சம்பவம் நடந்த தினத்தன்று காவல் நின்றாராம். அச்சமயம் மூன்று இனவாத மொட்டந்தலையர்கள் அவரை நெருங்கி மடக்கிப் பிடித்து ஒரு காருக்குள் தள்ளி வேறு ஒரு இடத்திற்கு கடத்திச் சென்றனராம்.

காரில் கடத்திச் சென்ற சமயம், தனக்கு ஊசி மூலம் போதை மருந்தை ஏற்றி தன்னை மயக்கமுறச் செய்ததாகவும், திமிறிய சமயம் அவர்கள் தன்னை துன்புறுத்தியதாகவும் பொலிஸாரின் விசாரணையின் போது அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட அந்தத் தமிழ் வாலிபரை மயக்கமான நிலையில், ஒரு இடத்தில் புகையிரத தண்டவாளத்தின் குறுக்கே போட்டுவிட்டு மறைந்து விட்டனர் மொட்டந்தலையர்கள்.

அந்த வழியாக செல்லும் புகையிரதம் ஒன்று அவர் காலுக்கு மேலால் ஏறிச்சென்றமையினால் அவரது வலது கால் முழங்காலுக்கு கீழ் துண்டாகி போய்விட்டது. இது பற்றி 5.45 பி.ப புகைவண்டி ஓட்டுனர் வந்து தெரிவிக்கையில், தனது

தொடர்ச்சி 9ம் பக்கம்

## இலங்கையை விட்டு உடனடியாக வெளியேற இந்தியா வானொலி நிருபருக்கு உத்தரவு

கொழும்பு நிருபர்

மேற்படி உத்தரவு குடிவரவுத்திணைக்கள அதிகாரி ஒருவரினால் இந்திய வானொலி நிருபர் கருப்பண்ணசாமியிடம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பாராளுமன்ற சபாநாயகர் முகமது அவர்கள் ராஜி

தொடர்ச்சி 9ம் பக்கம்

கண்ணீரில் நாம் காணும் வாழ்க்கை



இதுதானோ நீர் காணும் வேட்கை

## வடமராட்சிப் பகுதிகளில் பாரிய தாக்குதல்கள்

(எம். எஸ். சலீம்)

பருத்தித்துறைப் பகுதிகளிலும் ஏனைய கரையோரப் பகுதிகளிலும் கடும் சண்டை நடைபெற்று வருவதாக இலங்கையில் இருந்து கிடைக்கப்பட்ட பிந்திய செய்திகள் கூறுகின்றன.

மேலும் வடமராட்சி பகுதி முழுவதும் விமான, பீரங்கி குண்டு வீச்சு தாக்குதல்களும் கடந்த 24 மணி நேரமாக நடைபெற்று வருகின்றது. இப்பாரிய தாக்குதல்களினால் பல பொதுமக்கள் கொல்லப்பட்டு அல்லது காயப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

மேலும் கொழும்பு றத்மலானை விமான நிலையத்தில் இருந்து கிடைத்த தகவல்களின்படி பல இராணுவத்தினர் வடபகுதியில் இருந்து விமான மூலம் கொழும்பு இராணுவ வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

www.tamilarangam.net



# நீண்டகால பாலஸ்தீன பிரச்சனைக்குத்தீர்வு?

நீண்டகாலமாகத் தீர்வு காணப்படாத பாலஸ்தீனர் பிரச்சனைக்குத் தீர்வு காணுமுகமாகவும் மத்திய கிழக்கில் அமைதியை நிலை நாட்டவும் அமரிக்கா முன்னின்று நடத்தும் மத்தியகிழக்கு சமாதான மகாநாடு எதிர்வரும் 30ம் திகதி ஸ்பானிய தலைநகர் மட்றிட்டில் நடைபெற உள்ளது. இம் மகா நாடு அமரிக்காவின் செயலாழர் நாயகம் திரு ஜேம்ஸ் பேக்கரின் விடாமுயற்சியால் நடைபெற உள்ளது என்பதுவும் குறிப்பிடத்தக்கது. திரு பேக்கர் இம் மகாநாட்டை ஒழுங்குபடுத்தும் வகையில் ஸ்பானியத் தலைநகரை சென்றடைந்துள்ளார்.

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தும் இம் மகாநாட்டில் தீவிர ஆர்வம் காட்டி வரும் அதேவேளையில் எட்டு ஆண்டுகளுக்குப் பின்சிரியாவுக்கு விஜயம் செய்து சிரியாவுடனான பிணக்குகளை சீர் செய்ய பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகிறார். அரசியல் அவதானிகள், மத்திய கிழக்கு சமாதானத்திற்கு இது நல்ல சகுனம் என கூறியுள்ளனர்.

திரு அரபாத்தும் இவ் வரலாற்று முக்கியம் வாய்ந்த மகாநாட்டின் மூலம் பாலஸ்தீனப் பிரச்சனைக்கும் முற்றுப்புள்ளி வைக்க விரும்பியுள்ளார்.

இஸ்ரவேல் தரப்பில் இஸ்ரவேல் பிரதமமந்திரி இணக்கம் தெரிவித்துள்ள பேதிலும் வீடமைப்பு மந்திரி இதற்கு மறுப்பு தெரிவித்ததோடு அரசை இராஜினாமா செய்யுமாறும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.



பி.எல்.ஓ தலைவர் அரபாத், இஸ்ரவேலின் தாக்குதல்களுக்கு உள்ளானவர்களின் தகவல்களை ஐ.நா சபையில் சமர்ப்பிக்கிறார்.

## மீண்டும் லேபர் முன்னணியில்

இங்கு மீண்டும் லேபர் கட்சி கன்ஸவேட்டியிலும் பார்க்க ஏழு வீத வித்தியாசத்தில் முன் நிற்கிறது. ஒப்சோவர் பத்திரிகை நடாத்திய அபிப்பிராய வாக்கெடுப்பில் இது தெரிய வந்துள்ளது.

## இந்தியாவில் பூகம்பம்

இந்தியாவின் வடகிழக்கு டெல்லியை இன்று பூகம்பம் தாக்கியது என கடைசியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கிறது. இந்த பூகம்பம் 7.1 ஆக அளவிடப்பட்டுள்ளது. இது 220 மைல் சுற்று வட்டாரத்தை தாக்கியுள்ளது. இதனால் பாரிய சேதம் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# உலகச் செய்திகள்

## 4 இலட்சம் அகதிகள்

யூகோஸ்லாவியாவில் நடைபெற்று வரும் சிவில் யுத்தம் காரணமாக இவ்வருட இறுதியில் மட்டும் 4 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகள் ஆவார்கள் என யூகோஸ்லாவியாவிற்கான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி வான்ஸ் அச்சம் தெரிவித்துள்ளார். இவர் மேலும், அந் நாட்டில் வலுவான மத்திய அரசாங்கம் இல்லை என்றும் கடுமையான பொருளாதார தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

யூகோஸ்லாவியாவில் கடந்த சில மாதமாக குறோசியர்கள் தனியாக பிரிந்து போகப் போராட்டம் நடத்துவது யாவரும் அறிந்ததே. இந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர பலர் முயற்சி செய்தும் அது தோல்வியில் முடிவடைந்த போதும் இன்றும் ஒரு போர் நிறுத்த உடன்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## இந்தியாவில் ஒன்பது பேர் பலி

இந்தியா

வட இந்தியாவில் காஸ்மீர் பகுதியில் நேற்று நடைபெற்ற சண்டையில் 9 பேர் பலியாகி உள்ளதாக இந்திய செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. வட இந்தியாவில் காஸ்மீர் தீவிரவாதிகள் தனிநாடு கேட்டுப் போராடிவருவது தெரிந்ததே.

## சோனியா மீண்டும் மறுப்பு

மறைந்த ரஜீவ் காந்தியின் மனைவி அரசியலில் இணைய மீண்டும் மறுப்பு தெரிவித்துள்ளார். இவரை ராஜிவின் அமேதி தொகுதியில் காங்கிரஸ் கட்சி , இடைத்தேர்தலில் நிறுத்த முயன்ற போது அவர் ஆணித்தரமாக மறுப்புத் தெரிவித்துள்ளார். இந்த இடத்தினை ராஜிவின் உற்ற நண்பர் நிரப்பியுள்ளார்.

## லெபனான் குண்டு வெடிப்பு

லெபனான்

லெபனானில் இருவர் பலி பதினொரு பேர் காயம். இச் சம்பவம் போட்ஸ் ஸிடோன் எனும் இடத்தில் உள்ள அகதிகள் முகாமில் நடைபெற்றுள்ளது. இச் சம்பவத்திற்கு மூலகாரணம் மதுபான எதிர்பும் கலப்புத் திருமணமும் என தெரியவருகிறது.

## மத்திய கிழக்கில் மேலும் பயணக் கைதிகள் விடுவிப்பு

லெபனானில் இருந்து மேலும் ஒரு மேற்கு நாட்டை சேர்ந்தவர் ஒருவர் விடுவிக்கப்படுவார் என இஸ்ரவேல் வனொலி இன்று அறிவித்தது. அத்துடன் தாமும் சில அரபுக்கைதிகளை விடுவிப்பதாக அறிவித்துள்ளது. 1985 இல் கடத்தப்பட்டு காணாமல்போன இஸ்ரவோல் இராணுவத்தினர் ஒருவரின் மரணம் அண்மையில் ஊர்ஜிதம் செய்யப்பட்டதை தொடர்ந்தே இவ் அறிவிப்பு வெளியாகி உள்ளது. இஸ்ரவேல் ஏற்கனவே தமபடையில் காணாமல் போன ஐவரை விடுவிக்காவிடின் தாம் எந்த ஒரு அரபு கைதியையும் விடுவிக்கப்போவதில்லை என ஏற்கனவே அறிவித்திருந்தது.

## மண்டேலாவின் தாக்குதல்

தெற்கு ஆபிரிக்க முதல் கறுப்பு நிறத்தவரின் பல்கலைக் கழகமொன்றில் திரு. நெல்சன் மண்டேலா உரையாற்றுகையில், அண்மையில் எ.என்.சி கூட்டமொன்றில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு காரணமானவர்கள் நிறவெறி அரசின் பொலிசார் என தெரிந்தும் அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கண்டித்ததுடன் இதன் முழுப்பொறுப்பும் டி.கிளார்க்கையே சேரும் எனப் பகிரங்கமாக கண்டித்தார்.

## மேலும் அகதிகள் அமெரிக்காவில் அனுமதிக்கப்படுவர்

ஆண்டு தோறும் அமெரிக்கா வரும் அகதிகளின் எண்ணிக்கையை மேலும் 11 ஆயிரமாக ஜனாதிபதி புஷ் அறிவித்திருக்கிறார். சென்ற ஆண்டில் அமெரிக்காவில் 1,31,000 அகதிகள் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் 1991 அக்டோபர் வரை 1,42,000 அகதிகள் அனுமதி க்கப்படுவர். சென்ற ஆண்டு 50,000 சோவியத் அகதிகள் அமெரிக்கா வந்தனர். இனி 61,000 சோவியத் அகதிகள் வர அனுமதிக்கப்படுவர் ஆபிரிக்க அகதிகள்இன் அனுமதி 4900 இருந்து 6000 ஆக அதிகரிக் கப்படும்.

லத்தீன் அமெரிக்கா கரீபியன் தீவுகளின் அகதிகளின் எண்ணிக்கை 3100 இல் இருந்து 3000 ஆகவும் கிழக்கு ஐரோப்பிய அகதிகளின் 5000 இருந்து 3000 ஆகவும் வீழ்ச்சி கண்டுள்ளது. கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த அகதிகள் 52,000 பேர் உள்ளனர் சமீப கிழக்கு-தெற்கு ஆசிய அகதிகள் 6000 பேர் உள்ளனர்.


JAFFNA HOUSE

90, Tooting High Street,
London SW17

DO YOU FANCY JAFFNA FOOD
IN LONDON ?

Visit us opposite Tooting Broadway Tube Station
We delight you with

SPECIALS :
FRIDAYS - VEGETARIAN THALI
SATURDAYS - KOOL
SUNDAYS - JAFFNA STYLE FRIED CHICKEN & NOODLES

Caterers for weedings & parties. Takeaways £15 and over FREE delivery locally

TEL : 081-672 7786, 081-767 6668

Open: Sunday - Thursday 12.00 noon to 12.00 midnight
Friday - Saturday 12.00 noon to 1.00 am


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



The Eela Bhoomi

# ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

ஆண்டு 1 வாரம் 1 18-10-1991 வெள்ளிக்கிழமை

## ஈழபூமியின் ஏட்டில் இருந்து

வெகு சனத் தொடர்புச் சாதனங்கள் என்பது மக்களை அன்றாட வாழ்க்கையில், உலகத்தோடு இணைத்து வைத்துக் கொள்ளும் ஊடகமாகும். நாடுகளின் சரித்திரங்களையே மாற்றக் கூடிய வல்லமை கொண்ட ஊடகமான பத்திரிகைத்துறை அதனைச் சார்ந்த மக்களுக்கும் நாட்டிற்கும் அளப்பரிய சேவையை ஆற்ற வேண்டும். பக்கம் சாராமை, எக்கருத்தானாலும் துணிவோடு பிரசுரிக்கும் வல்லமை, செய்திகளை இலகு நடையிலும் மக்களுக்கு புரியக்கூடிய வகையிலும் அளித்தல் போன்றவை அப் பத்திரிகைத் துறையின் அத்தியாவசியமான பண்புகளாக இருக்க வேண்டும்.

ஒரு மனிதனுடைய 'சுதந்திரம்' என்றால் என்ன என்று கூறுவதை விட அவனைப் பேச விடாமல் தடுத்தும், எழுத நினைப்பதை வாய்ப்பளிக்காது நிறுத்தியும், அடக்கி ஒடுக்கினோமாயின் அவன் தன்னை ஏதோ சில கட்டுப்படுத்துவதாயும், அதனின்றும் விடுபடுவதே 'சுதந்திரம்' என்பதையும் இலகுவாகப் புரிந்து கொள்ளுவான். இத்தகைய சுதந்திரம் ஒரு மனிதனுக்கு இருக்குமானால் தான் நினைக்கும் கருத்துக்களை எந்த அச்சுறுத்தலோ தடையோ இன்றி எழுதும் உரிமை இருக்க வேண்டும். எழுத ஒரு ஊடகமும் இருக்க வேண்டும்.

இந்த வகையில் இலங்கையிலிருந்து வெளிவரும் எந்த பத்திரிகையும் தமக்கு கிடைக்கின்ற தகவல்களை வைத்து செய்தி வெளிவிடும் உரிமையற்றவனவாக காணப்படும் இக்கால கட்டத்தில் உண்மை நிகழ்வுகளை அப்படியே வழங்குவதற்காகவும் ஐரோப்பிய தமிழ்ச் சமூகத்திற்கு வாய்ப்பளிக்கும் முகமாகவும் தோன்றும் வாராந்திரிதான் ஈழபூமி.

தமிழ் பேசும் மக்கள் சுதந்திரத்துடனும் சுபீட்சத்துடனும் தமது விதியை தாமே சமைத்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமை உள்ள "ஈழம்" தான் ஒரே குறிக்கோளாக கொண்டிருக்கும் ஈழ பூமி எந்த ஒரு இயக்கத்துடனோ அன்றி அரசியல், சமய, சமூகக் குழுவுடனோ சார்புடைய பத்திரிகையாக ஒரு போதும் செயலாற்றாது.

ஒரு மனிதனின் உடற்கலங்கள் இயங்குவதற்கு உணவு எவ்வளவு அவசியமோ அதே போலவே உலக நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள ஈழபூமி அவசியம் என்பதை உணரும் வகையில் செய்திகளையும் ஆக்கங்களையும் முடிந்தவரை பிரசுரிக்கவுள்ளோம்.

இதுவரை காலமும் ஐரோப்பாவில் வெளி வராதது மாதிரி யான, வித்தியாசமாக வெளிவரும் ஈழபூமி ஐரோப்பாவில் குறைந்த விலையில் விற்பனையாகும் பத்திரிகை என்ற பெயரையும் பெறுகிறது. எம்நாட்டின் விடுதலைக்கு போராட்டம் எந்தளவு அவசியமோ அதேபோன்று ஈழபூமியின் வளர்ச்சிக்கு உங்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

"அனைத்து செய்திகளையும் தாங்கிவரும் தனித்துவமான பத்திரிகையே ஈழபூமி"

தொடர்புகளுக்கு.........
**The Eela Bhoomi,**
**164A (Rear) Mitcham Road,**
**London SW17**

## அவர்களின் தலைகளில்

(ஐ.நா.சபையின் **UNHCR** அறிக்கையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.)

'1987 ஆம் ஆண்டிற்கும் 1989 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பிய அகதிகளாகச் சென்ற மக்கள் மீண்டும் ஒருமுறை அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் மீண்டும் ஒருமுறை வடகிழக்கில் ஏற்பட்டிருக்கும் சண்டையின் விளைவுதான் இதற்குக் காரணம். இவ்வாறு சிதறுண்ட மக்களுக்கும் சின்னாபின்னமாக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களது வாழ்க்கையைப் பழைய நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கைகளை எடுத்துவரும் **UNHCR** இன் முயற்சிகளுக்கு இலங்கையின் பாதுகாப்பு ஸ்திரமின்மையும், ஒழுங்கீனமும் பெரும் இடைஞ்சலாக இருந்துவருகிறது."

'கடைசியில் நாங்கள் மீண்டும் இந்த தஞ்ச விடுதியில்தான் வந்து சேர்ந்துவிட்டோம்' 38 வயது நிரம்பிய மூன்று பிள்ளைகளின் அன்னை ஒரு விதவை யோகேஸ்வரியின் வார்த்தைகள் அவை. அவருடைய குடும்பத்திற்கு ஒரு சிறிய அறையொன்று அந்த முகாமில் ஒதுக்கப்பட்டிருந்தது. மடுவிலே இருக்கும் அந்த முகாமில் இன்னும் ஆயிரமாயிரம் மக்களின் நிலையும் இதுதான்.

கடந்த ஏழு வருடங்களாக யோகேஸ்வரியின் வாழ்க்கை சீர்குலைந்து காணப்படுகிறது. 1983 ஆம் ஆண்டு வடமாகாணத்திலிருந்து ஒரு வள்ளத்தில் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார் யோகேஸ்வரி. ஐந்து வருடங்களின் பின்னர் மீண்டும் அவர் இலங்கைக்குத் திரும்பி வரும் போது தலை மன்னாரிலுள்ள ஐ.நாசபையின் உதவியுடன் இயங்கும் ஒரு முகாமிலே அவருக்கு இடம் வழங்கப்பட்டது.

இறுதியில் அப்பகுதியின் நிலை சீரடைந்ததைக் கண்கொண்டு பார்க்கக்கூடியதாக இருந்தவேளை ஐ.நா சபையின் உதவியுடன் யோகேஸ்வரி தனது வழமையான வாழ்க்கைக்குத் திரும்ப தனது தாய்மண்ணான முருங்கன் கிராமத்திற்குத் திரும்பிச் செல்கிறார். அங்கு அவருடைய உடையுண்டு அழிந்து கிடந்த வீட்டினைத் திருப்பிக் கட்டுவதற்குரிய உதவிகள் வழங்கப்பட்டன. அதே போலவே ஐ.நாவின் புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் அந்தக் கிராமத்திற்குத் தேவையான உள்ளூர்ச் சேவைகள் திருத்த வேலைகள் முடுக்கி விடப்பட்டன.

கண்டகனவுகள், கட்டிய கோட்டைகள் யாவற்றிற்கும் மீண்டும் ஒரு நாசத்தைக் கொண்டுவந்து கொடுத்தது ஆடி மாதம் 1990 ஆம் ஆண்டு. இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இடையிலே யுத்தம் மூண்டது. முடுக்கி விடப்பட்ட வேலைத் திட்டங்கள் சிதம்பிப் போயின. நிலமை முன்னரைவிடப் பன்மடங்கு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. அப்பகுதி மக்கள் தங்கள் உடமைகள், வீடு வாசல் யாவையும் இழந்து அகதிகளாகச் சிதறுண்டனர். ஆடிமாத நடுப்குதியளவில் முருங்கன் கிராமம் மன்னாரில் உள்ள ஏனைய பகுதிகளைப் போன்று சுடலையாக மாறியது. மக்கள் மீண்டும் கடலைக்

கடந்து இந்தியாவுக்குத் தப்பியோட ஆரம்பித்தனர். சிலர்வேறு இடங்களுக்கு அடைக்கலம் நாடிச் சென்றனர். கடந்த ஆறு மாதங்களில் 17500 பேருக்கு மேற்பட்ட இப்பகுதி மக்கள் மடுவிலே உள்ள அகதிமுகாமில் தஞ்சமடைந்தனர். மடுமன்னார் மாவட்டத்தில் அமைந்திருக்கும் ஒரு பகுதி. இது அகதிகளுக்கு அடைக்கலம் அளிப்பது இதுவல்ல முதல்த்தடவை.

17ம் நூற்றாண்டில் டச்சுக்காரர்களின் கெடுபிடிகளினால் அகதிகளாய்ப்போன கத்தோலிக்கர்களும் இங்கேதான் தஞ்சம் புகுந்திருந்தனர். கடந்த ஆண்டு ஐப்பசி மாதம் **UNHCR**



## மேலொரு கூரை....

ஒரு பாரிய புனர்வாழ்வுத் திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் உருவாக்கியது. இரண்டு முக்கிய இடங்கள் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லவென அமைக்கப்பட்டது.

ஒன்று மடு, மற்றயது பேசாலை. இதன் விளைவாக வீடற்று, நாதியற்று அநாதைகளாகப் போன மக்களின் தலைகளின் மேலும் கூரைகள் இருக்கின்றன என்ற நிலையை உருவாக்கிக் கொடுத்தது இத்திட்டம்.

அகதிகளாக வந்த 17500 பேருக்கும் புகலிடம் வழங்கப்பட்டது. நாளுக்குநாள் மோசமடைந்துவரும் இந்தக் கொடூர நிலையிலே அவர்களுக்குத் தொடர்ந்தும் அகதிமுகாம்களில் வசிப்பது இலேசான காரியம் அல்ல. என்றாலும், யோகேஸ்வரி போன்றோருக்கு இதைவிட வேறுவழியும் இல்லைத்தான்.

## போதைவஸ்து கடத்தல் ரெலோ பிரமுகர் இருவர் கைது

(விசேட நிருபர் வேந்தன்)

இலண்டன் வூல்விச் (woolwich) எனும் இடத்தில் வைத்து ஐந்து இலட்சம் பெறுமதியான போதை வஸ்து வூல்விச் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளது. பல பேரின் கவனத்தை திசைதிருப்பிய இச்சம்பவத்தில் ஈழத்தில் இருந்து அகதிகளாக இங்கு தஞ்சம் கோரியிருப்பவர்கள் பலர் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என செய்திகள் வெளியாகியுள்ளன.

மேற்படிச் சம்பவம் கடந்த 23-04-91 வியாழக்கிழமை சுமார் இரண்டு மணியளவில் வூல்விச் எனும் இடத்தில் இடம் பெற்றது. இச் சம்பவம் தொடர்பாக பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரெலோ எனும் விடுதலை அமைப்பில் இருந்து விலகிச் சென்ற சுதன், சங்கர் என்பவர்களை யாவரும் அறிந்ததே. தாஸ் குழுவில் மேல் மட்ட அங்கத்தினரின் வரிசையில் இருந்த சுதன் என்று அழைக்கப்படும் [illegible] செய்யப்பட்டவராவார். கெரோயின் எனும் மனித குலத்தை அழிக்கும் ஒரு வகை போதை வஸ்துக் கடத்தல் இவராலும் இவருடன் கூடிய இன்னும் சிலராலும் சில காலமாக இலண்டனில் செய்யப்பட்டு வந்ததாம்.

இவர்களின் கடத்தல் தொடர்பாக தகவல் அறிந்த இலண்டன் இரகசியப் பொலீஸ் அலுவலகர் ஒருவர் இவர்க்ளிடம் போதை வஸ்து வாங்கி விற்பவர் போல நடித்து வந்திருக்கின்றார். கடத்தல் காரர் யார் எங்கிருந்து வந்தவர்கள் இவர்களின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்ற தவகல்களைச் சேகரிக்கும் வரை இவர் இவர்களிடம் போதை வஸ்துக்களை வாங்கி வந்தாராம் இவர்கள் பற்றிய தவகல்கள் யாவும் அறிந்த பின்னர் 23-04-91 அன்று சுதன் என்பவரை கைது செய்திருக்கிறார் இந்தப் பொலீஸ் அலுவலகர்! இச்சம்பவம் சுமார் இரண்டுமணியளவில் அவரது இல்லத்தருகாமையில் இடம் பெற்றுள்ளது. இவர் கைது செய்ய நிறையான கெரோயினை அந் தப் பொலீஸ் அதிகாரிக்கு விற்றிருக்கின்றார்.

கெரோயினை விற்கச் சென்ற வேளை இவருடன் தொடர்புடைய ஸ்ரீ எனப்படும் முத்துவேலு ஸ்ரீபதியையும் அழைத்துச் சென்றிருக்கிறார். சுதன் கைது செய்யப்பட்ட வேளை ஸ்ரீபதி வாகனம் ஒட்டியதாகச் சொல்லப் படுகிறது.

இவர்கள் இருவருக்கும் விலங்கு மாட்டியதுடன் பொலீசார் இவர்களது வீட்டை முற்றுகையிட்டு பரிசோதனை செய்த சமயம் மேலும் இரண்டு கிலோ பெறுமதியான கெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. நீதிமன்ற மதிப்பின் படி இது அண்ணளவாக 5 இலட்சம் பவுண்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரனையை மேற்கொள்ளும் பொருட்டு இவர்கள் இருவரும் பெல்மாஸ் (Belmarsh) சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net



# அகிம்சையில் இருந்து ஆயுதம் வரை

எமது ஈழ விடுதலைப் போராட்டமானது பல பின்னணிக் காரணங்களைக் கொண்டு ஆரம்பமான ஒரு போராட்டம். பிரித்தானிய ஏகாதிபத்தியக் கும்பல்களினால் சுதந்திரம் என்று சொல்லி எமது தேசத்தின் வளங்கள்யாவும் சுரண்டி எடுக்கப்பட்ட நிலையில் பிரயோசனமற்ற பூமியாக கைவிடப்பட்ட வேளையில் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு ஆட்சியைப் பிடித்துக் கொண்டது சிங்கள அரசு. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என மூன்று பிரதான இனங்களையும் சிங்களம், தமிழ் என இரண்டு பிரதான மொழிகளையும் கொண்ட இலங்கைத் தீவின் மீது ஏராளமான வல்லரசுகளின் கவனம் திசை திரும்புவதற்கு கேந்திர முக்கியத்துவம் ஒரு காரணமாய் இருந்தது.

1948ஆம் ஆண்டிலிருந்து தமது கரங்களைப் பலப்படுத்தி பாராளுமன்றத்தை அமைத்துக் கொண்ட சிங்களப் பேரினவாத முதலாளித்துவ அரசியல் கட்சிகள், தமிழ் மக்களின் முன்னேற்றம் கருதியோ அன்றி பிரித்தானிய பிசாசுகளினால் உருவாக்கப்பட்ட பிரித்தாளும் தந்திரத்தின் காரணமாக ஏற்பட்ட விரிசல் காரணமாகவோ எம்மக்களின் நலங்களை கொஞ்சம் கொஞ்சமாக நசுக்குவதில் நாட்டம் செலுத்தத் தொடங்கின. கல்வியின் நிமித்தம் பெரிய பெரிய திணைக்களங்கள், அலுவலகங்களில் ஸ்திரநிலையை கைப்பற்றியிருந்த தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பறிப்பது, இனி வருங்காலங்களில் தொழில் வாய்ப்பில் பாரபட்சம் காட்டுவது, தமிழ் மக்கள் செறி வாக வாழும் பிரதேசங்களில் குடியேற்றங்களை உருவாக்குதல் மூலம் அப்பகுதிகளில் தமிழ் பேசும் மக்களை சிறுபான்மையினராக்குவது போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகள் எம்மக்களுக்கெதிராக தொடரப்பட்டமை இந்நடவடிக்கையின் பின்னணியில் நின்ற இருபெரும் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மீதும் ஐ. தே. கட்சியின் மீதும் வெறுப்பை உண்டு பண்ணியது.

தொழில் வாய்ப்பில் பாரபட்சம், உயர் கல்வித் தெரிவில் தரப்படுத்தல், மற்றைய சேவைகளில் ஒதுக்கம் போன்ற அரச நடவடிக்கைகள் அவ்வப்போது ஊசலாடும் நிலையில் இருந்த தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்ளை அகிம்சாவழிப் போராட்டங்களிற்குத் தூண்டியது எனலாம்.

தமிழ் மொழியை சட்டமொழியாக, தேசிய மொழியாக அங்கீகரிக்காமையும் சிங்களம் மட்டும் சட்டம் அமுல்படுத்தியமையும் இனரீதியான பிரச்சனை தமிழ் பேசும் மக்களின் அடிமட்டம் வரை தேசிய இன உணர்வை ஊட்டம் பெறச் செய்த நிகழ்வுகள் என்பது யாரும் மறுக்க முடியாத ஒன்று.

ஒவ்வொரு முறையும் தேர்தல் நாடகம் நடாத்தப்படுவதும் அதிலே சிங்களப் பெரும்பாண்மை கொண்ட ஒரு அரசு ஆட்சிக்கு வருவதும் மாறிமாறி நடந்தனவே தவிர தமிழ் மக்களின் பிரச்சனைக்கு ஒரு தீர்வை எந்த அரசும் முன்வைக்கவில்லை. தமிழ் பேசும் மக்களின் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்ற உணர்வு உழைக்கும் வர்க்கத்திலிருந்து உருவும் வர்க்கம் வரை வேரூன்றிய வேளையில்தான் தமிழ்க் கட்சிகள் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சியை ஆரம்பித்து தமிழீழம் தான் இறுதித்தீர்வு என்று தேர்தல் பிரச்சாரம் செய்தது.

இனவெறியின் உச்சியிலே ஊஞ்சலாடிய பொதுமக்களும் தமிழீழம் தலைவர் அப்பாக்குட்டி அமிர்தலிங்கத்தினால் வாழைப் பழம் உரித்துத் தருவது போல தரப்படும் என்று நம்பி தமது வாக்குகளை கூட்டணிக்கு அள்ளிப்போட்டு கூட்டணியை அமோக வெற்றியீட்டச் செய்தனர்.

ஆனால் வாக்குகளைப் பெற வார்த்தைகளை அள்ளி வீசிய கூட்டணிப் பிரமுகர்கள் வார்த்தைகளை நடைமுறைப்படுத்த தீட்டிய திட்டம் என்ன என்பது பற்றியோ, அல்லது அதனை நோக்கி தாம் மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் பற்றியோ எதையும் தெளிவு படுத்தவில்லை.

தென்னிலங்கையில் விடயம் புரியாத அப்பாவிச் சிங்கள மக்களை இன வெறியை ஊட்டி சிங்களக் கட்சிகளும் வடகிழக்குப் பகுதிகளில் தமிழ் வெறியை ஊட்டி கூட்டணியும் வாக்கு என்ற இலட்சியத்தை வென்று பாராளுமன்றக் கதிரைகளில் பவனி வந்தனரே தவிர பாராளுமன்றத்துக்கு போகமுன் கூறிய வழங்கிய வார்த்தைகள் என்ன என்பதே ஞாபகம் அற்றவர்களாக மாறிப்போனார்கள். கொள்கைகளை முன்வைப்பதும் பின் பாராளுமன்றப் புயலில் அடிபட்டுப் போவதுமே பொது அரசியலாகிப் போன வரலாற்றுக் காற்றை சுவாசித்த எம்மக்கள் 1977ம் ஆண்டு அமோக வெற்றியீட்டிய கூட்டணியையும் அந்த வரிசையில் நின்ற மஞ்சள் காவிகளே என்பதை அறிய நீண்ட காலம் எடுக்கவில்லை.

> "1984 ஆம் ஆண்டுப் பகுதிகளில் சுமார் 52 இயக்கங்கள் ஈழ விடுதலைக்காக போராடிக் கொண்டிருந்தன"

தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் ஒரு கொள்கை இருக்கவில்லை. அதனை வென்றெடுக்கும் பாதை இருக்கவில்லை. அதனை மக்களுக்கு எடுத்துக் கூறும் சக்தி இருக்கவில்லை. 'வௌவால் வரும்' என்பதும் 'பண்டாரவன்னியன் பரம்பரையில் வந்தவர்கள்' என்றதும் போன்ற போதைகளை ஊட்டி காரியத்தைச் சாதித்துக் கொண்ட அவர்களின் சாயம் வெளுக்க நீண்ட காலம் எடுக்கவில்லை.

ஜே.ஆரின் அரண்மனையில் மது அருந்திவிட்டு வட்ட மேசை நாடகம் போட்ட காத்தவராயன் கூத்துத் தலைவர் அமிர்தலிங்கமும் அவர்களுடன் சேர்ந்து கூத்தாடிய ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கையாலாகாதவர்கள் என்பதை புரிந்து கொண்ட வேளையில்த்தான் எமது போராட்டத்தின் இன்னொரு வடிவத்தின் அவசியம் உணரப்பட்டது. அகிம்சை என்று சொன்ன போதெல்லாம் ஆயுதங்களைப் பாவித்த சிங்களப் பேரினவாத அரசை எதிர்க்க வேண்டுமாயின் உண்ணாவிரதமும் ஊர்வலமும் உதவாத ஆயுதங்கள் என்பதைப் புரிந்து கொண்ட இளைஞர்களின் விழிப்புணர்ச்சியும் உத்வேகமும் ஆயுதப்போராட்டம் ஒன்று தேவை என்ற கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இதன் விளைவாக ஆங்காங்கே பாதிப்படைந்த இளைஞர்கள் கொள்கையோ இலட்சியமோ இன்றி தன்னிச்சையாக சில செயற்பாடுகளைச் செய்தனர். பொலிசைத் தாக்குவது, அரச ஆதரவாளர்களைச் சுடுவது போன்ற வாய்ந்தமை குறிப்பிடத் தக்கது. இதன் விளைவு இலங்கை அரசு ஆயுதப்படைகளின் விஸ்தரிப்பை வடகிழக்கு மாகாணங்களுக்கு விரிவுபடுத்தியது. இச் செயல்களிலே ஈடுபட்ட இளைஞர்களை வேட்டையாடும் பணியிலே இறங்கியது. இக்கால கட்டத்தில்த்தான் சுயேற்சையாக இயங்கிய இளைஞர்கள் ஒன்று கூட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கினார்கள்.

இயக்கங்களின் வளர்ச்சி தொடர்பாக ஆராய முன்னர் விடுதலைப் போராட்டத்தில் அமைப்புக்கள் வளர வேண்டிய முறை தொடர்பாக ஆராய வேண்டியது அவசியமாகும். கடந்த காலங்களில் விடுதலைக்காகப் போராடிய இயக்கங்களின் வரலாறுகளைக் கண்கொண்டு பார்ப்போமானால் அவ்வமைப்புக்களின் வளர்ச்சி படிப்படியான மாற்றத்தை உண்டு பண்ணியிருப்பதைக் காணலாம். ஒரு அமைப்பு அதன் அங்கத்தவர்களை படிப்படியாக இணைத்துக் கொள்ள வேண்டும். இதன் நோக்கம், இணைந்து கொள்ளும் தோழ தோழிகள் முறையாகப் பயிற்றப்பட வேண்டும், அவர்கள் போராட்டத்தின் அவசியத்தை உணரவேண்டும், அமைப்பின் வளர்ச்சியை கட்டுப்படுத்திக் கட்டுக் கோப்பான நிலையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இப்படி படிப்படியாக வளரும் ஓர் அமைப்பின் பின்னடைவுகள், பற்றாக்குறைகள், பிழையான கொள்கைகள், தேவையற்ற நடைமுறைகள் தவிர்க்கப்படவும், திருத்தப்படவும் வசதியாக இருக்கும். இதுவே அந்த அமைப்பை தரமான பலமான எதிரியை வென்று உரிய இலட்சியத்தை நிலைநாட்டக் கூடிய அமைப்பாக மாற்றமடையச் செய்யும்.

ஆனால் மேற் சொன்ன சாஸ்திரம் எமது போராட்டத்தில் தலைகீழாக மாறிப்போனமை பற்றிச் சிந்திக்க முன் போராட்டத்தின் நிமித்தம் ஒன்று சேர்ந்த இளைஞர்கள் இரண்டு வேறு குழுக்களாக பிரிந்த நிலை இங்கே நோக்கப்பட வேண்டும். இவ்வாறு பிரிந்த குழுவில் ஒன்றான தமிழீழ விடுதலைப் புலிகளின் 1983ம் ஆண்டுத் தாக்குதலும் (13 இராணுவம் இறந்தமை) அதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரமும் அதன் நிமித்தம் ஏற்பட்ட உயிர், பொருள் சேதமும் எமது போராட்டத்தில் ஒரு பாய்ச்சலைக் கொண்டு வந்தது.

ஆயுதப் போராட்ட வரலாற்றை நோக்கமுன் விடுதலை இயக்கங்களைப் பற்றிய மேலோட்டமான ஒரு விளக்கத்தை நாம் அறிந்து கொள்ளல் அவசியமாகும். கிட்டத்தட்ட 1984ம் ஆண்டுப் பகுதிகளில் சுமார் 52 விடுதலை இயக்கங்கங்கள் ஈழ விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். பத்துப் பதினைந்து பேருக்கு ஒரு தலைவர் அதற்கு செம்பகம், கழுகு அல்லது நாகம் என்று பிராணிகளின் பெயர். ஈழப் போராட்டம் என்று சொல்லி நகை பறிப்பது கொள்ளையடிப்பது இதுவே அவர்களின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள். இதனுள்ளும் மக்களால் அடையாளம் காணப்பட்டதும் திடீர் வளர்ச்சியைக் கொண்டிருந்ததுமான அமைப்புக்கள் நான்கு எனலாம். அவை முறையே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (P.L.O.T), தமிழீழ விடுதலைப் புலிகள் (L.T.T.E), தமிழீழ விடுதலை இயக்கம் (T.E.L.O), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F), என்பனவே அவை. இவை இதுவரை காலமும் அரசியல் கட்சிகள் செய்யாத செயல்கள் சிலவற்றைச் செய்தன. அவையே சாதாரண அரசியல்க் கட்சிகளிடமிருந்து இயக்கங்களை இனம் பிரித்துக் காட்டிய செயல்கள் எனலாம். இந்நான்கு இயக்கங்களையும் இரண்டு பிரிவினுள் அடக்கலாம். ஒன்று ஆயுத யுத்தத்தின் மூலம் மட்டும் விடுதலையை அடையலாம் என்ற கொள்கையுடைய அமைப்புக்கள். (T.E.L.O, L.T.T.E) மற்றயது ஆயுதத்துடன் கூடிய அரசியல் தத்துவம் இணைந்த போராட்டம் என்ற கொள்கையுடைய இயக்கங்கள் (PLOT, EPRLF) இவற்றுடன் சேர்ந்த EROS என்ற அமைப்பையும் நாம் கணிப்பில் சேர்த்துக்கொள்ளலாம்.

ஆயுதத்துடன் கூடிய அரசியல் நடைமுறைதான் வெற்றியை ஈட்டித்தரும் என்று கூறிய அமைப்புக்கள் இக் கொள்கையைத் தெரிவு செய்வதற்கு என்ன காரணம் இருந்திருக்கலாம் என்பதை இக்கட்டுரையில் ஆராய்வது சிறந்ததென எண்ணுகிறேன். விடுதலைப் போராட்டமானது வெறும் 'தமிழ்' என்கின்ற வெறியிலே உருவெடுத்த ஒன்று என்றாலும் வெறும் மண்ணின் விடுதலை மக்களின் விடுதலையாக மாறி விட முடியாது என்பது சிந்தனை வயப்பட்ட இளைஞர்களைத் தூண்டியதால் ஒரு தேசத்தின் விடுதலை அதனை வென்றெடுப்பதில் மட்டுமல்ல அந்த சமுதாயத்திலே மூழ்கிக் கிடக்கும் இதர பிரச்சனைகளையும் வென்றெடுப்பதிலும் தங்கியுள்ளது என்பதை இவ்வியக்கங்கள் சிந்திக்கத் தொடங்கின. இதற்கு இவ்வியக்கங்கள் அளித்த விளக்கம் வருமாறு: முதலாளித்துவ முதலைகளினால் சூறையாடப்பட்டிருக்கும்

> "வாக்குகளைப் பெற வார்த்தைகளை அள்ளி வீசிய கூட்டணிப் பிரமுகர்கள் வார்த்தைகளை நடைமுறைப்படுத்த தீட்டிய திட்டம் என்ன என்பது பற்றி ஒருபோதும் தெளிவுபடுத்தவில்லை"

எமது சமுதாயம் விடுதலை பெற வேண்டுமானால் இரண்டு எதிரிகளை இயக்கங்கள் நேரிட வேண்டியேற்படும். ஒன்று பொது எதிரியான இலங்கை அரசு இயந்திரம், இரண்டாவது இதர எதிரிகளான எமது சமுதாயத்தினுள் ஊறியிருக்கும் சமுதாயப் பிரச்சனைகள். பொது எதிரியை எதிர்ப்பதில் ஒற்றுமை கொண்டிருந்த இவ்வியக்கங்கள் இதர எதிரிகளுக்கு முகம் கொடுப்பதில் வித்தியாசமான போக்கினைக் கொண்டிருந்தன.

இவ்வாறு பொது எதிரியை இனங்கண்டு கொண்ட இயக்கங்கள் உள் எதிரியை எப்படி இனங்கண்டன என்பது இரண்டாவதாக எழும் கேள்வி. இதற்கு புளட் என்னும் அமைப்புக் கூறிய விளக்கம் என்ன என்பதை இங்கு ஆராய்வதன் மூலம் விளக்கம் பெறலாம் என்று எண்ணுகிறேன். ஈழ மக்களின் சமுதாய அமைப்பில் இரண்டு இனங்கள், ஒரு மொழி, மூன்று மதங்கள் முக்கிய பங்கு வகித்தன. முஸ்லிம், தமிழ் என்பன இனங்களாகவும், தமிழ் மொழியாகவும் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களாகவும் அடையாளம் காணப்பட்டது. ஈழம் என்கின்ற ஈழதேசம் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடகிழக்கு பாரம்பரிய பிரதேசம் என வரையறுக்கப்பட்டது. இங்கே இனங்காணப்பட்ட பிரச்சனைகள் வறுமாறு: சாதிப்பிரச்சனை, பெண்ணடிமை, பிரதேச வேறுபாடு, வருமானப் பங்கீடு இவையே முதன்மை வகித்த பிரச்சனைகளாகும். இவை ஒவ்வொன்றையும் தனித்தனியே ஆராய வேண்டியது அவசியமாகும்.

சாதிப் பிரச்சனை – வடகிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் பேசும் மக்கள் அண்ணளவாக ஐம்பதற்கும் மேற்பட்ட சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். செய்கின்ற தொழிலை அடிப்படையாக வைத்துப் பிரிக்கப்பட்டிருந்த சாதிகளில்ச் சில தீண்டத்தகாதனவாகவும் சில சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளனவாகவும் என பல்வேறு நிலைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. திருமணம், காதல், ஒன்றுகூடல் போன்ற நிகழ்வுகள் ஒவ்வொரு சாதியமைப்புக்குள்ளேயே கட்டுப்பட்டிருந்தது. ஒரு காலத்தில் உயர்ந்த சாதியினை உடையவர்கள் என்று கணிக்கப்பட்டவர்கள் பாடசாலைகளில் கதிரைகளிலும் கீழ்ச்சாதியினர் என்று ஒதுக்கப்பட்டவர்கள் நிலத்திலும் இருந்து படிக்கின்ற நிலை காணப்பட்டது. சிறு வயதிலிருந்தே கீழ்ச்சாதி என்று இனங்காணப்பட்டவர்களுடன் சேர்ந்து விளையாடுவது உயர்ந்த சாதி என இனம் காணப்பட்டவர்களினால் தவிர்க்கப்பட்டிருந்தது. உயர்ந்த சாதியினரைக் கண்டால் தோளில் போட்டிருக்கும் துண்டை எடுத்து இடுப்பில்க் கட்டிக் கொண்டு கைகளைக் கட்டி மரியாதை செய்ய வேண்டிய நிலையிலுள்ளவர்கள் இன்றும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு பிரிவிலும் உள்ள இருவர் காதலித்தால் சமுதாயமே அவர்களை ஒதுக்கி வைத்தது. இதுவே சாதி தொடர்பாக இனங்காணப்பட்ட பிரச்சனையாகும்.

*தொடர்ச்சி அடுத்த இதழில்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நினைவோ ஒரு பறவை

தறையூர் பாலன்

கடிகாரம் கிறீச் என்ற சத்தத்துடன் எலாம் அடித்துக் கொண்டது. வித்தியாவின் கை எரிச்சலுடன் நீண்டது. வித்தியாவின் கை கடிகாரத்தை அண மிக்கும் முதல் கடிகாரம் தானாகவே நின்றுவிட்டது. எப் பொழுதும் இப்படித்தான் எரிச்சலுடனே விழித்துக்கொள்வாள்.

எதிர்பார்ப்புகள் அற்ற விழிப் புக்கள் அவை. அவள் காலத்தால் கரையேறி வந்தவள். நேரத்தைப் பார்த்தாள். வழமைபோல ஏழு மணி. ஒய்வற்ற இந்த வாழ்க் கையை நினைத்து தனக்குள்ளே அலுத்துக்கொண்டாள். கைகளை ஒன்று சேர்த்து சோம்பல் முறித் துக்கொண்டாள். சுகம் காணாத பல இரவுகளை வீணே கழித்துக் கொண்டதற்காக.

இன்னும் இரு மணித்தியால ங்கள் தான் உண்டு. இயந்திரம் போல இயங்குவதற்கு. வித்தியா ஒரு பலசரக்கு கடை ஒன்றில் காசாளராக வேலை செய்கிறாள். இடது பக்கமாக திரும்பி படுக்க நினைத்தவளுக்கு சட்டென்று இடது கை சுட்ட பின் தான் சுற்றர் இன்னும் வேலை செய்து கொண்டிருக்கிறது என்பது தெரி ந்தது. இன்று மட்டும் என்ன சுற்றிங் ஏழு மணிவரை வேலை செய்து கொண்டிருக்கிறது தன க்குள்ளே முணு முணுத்துக் கொண்டாள்.

என்ன வாழ்க்கை இது அவள் மீண்டும் தனக்குள்ளே அலுத்து க்கொண்டாள். வெறுப்புடன் புன் னகை அவள் முகத்தில் வந்து போனது. அக்கரைகள் பச்சை [illegible] படித்த கதைப் புத்தகம் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது. காலங்கள் எப்படி மாறிவிட்டன. எதிர்பார்ப் புக்கள் எல்லாம் வெறும் ஏமாற்றங்களாக, ஏக்கங்கள் எல் லாம் வெறும் பெரு மூச்சுக்களாக இருக்கும் நிகழ்காலங்கள். கனவு களை மட்டும் தந்துவிட்டு சென்ற இறந்த காலங்கள். விடை காண முடியாத எதிர்காலங்கள். இப்படி மாறி மாறி அவள் நினைவுக்கு வந்தன.

வீட்டின் கீழ்ப் புறத்தில் ஏதோ சத்தம் கேட்டது. நிச்சயமாக பால்க்காரனாகத்தான் இருக்கும். தபால்காரன் இவ்வளவு கெதி யில் வந்துவிடுவானா என்ன? அவள் சிந்தனை சட்டென்று தபால்காரன் மேல் போனது. பல வார காலமாக அவள் தபால் க்காரனை நேசிக்க ஆரம்பித்து விட்டாள். விவேக்கிடம் இருந்து கடிதம் வந்து கிட்டத்தட்ட மூன்று வாரங்களாகி விட்டது. சிந்தனை கள் திசை திரும்பத் தொடங் கியது. அவள் உதடுகள் அவன் பெயரை அழுத்தமாக உச்சரித்துக் கொண்டன. விவேக் என்ன இனிமை இந்தப் பெயரில். சட் டென்று நேரத்தை பார்த்தாள் பத்து நிமிடங்கள் நினைவுகளில் உருண்டோடி விட்டது. சட்டெ ன்று எழுந்து கொண்டவள் பாத்ரூமுக்குள் ஓடினாள். இத மான சுடுநீர். நேற்றைய வலியை குறைத்துக்கொண்டது. எமது ஊரில் என்றால் கிணற்றடியில் அந்தக் குளிர் நீரில்......... அவளு க்கு நினைக்கும் போதே கவலையாக இருந்தது. எவ்வளவு தூரத்துக்கு வாழ்க்கை அலைக் கழிக்கப்பட்டுவிட்டது. நாட்டுப் பிரச்சனை, வீட்டுப் பிரச்சனை என்று ஒவ்வொருவருடைய வாழ் க்கையிலும் விதி விளையாடி விட்டது.

சொர்க்கமே என்றாலும் -அது நம்மூரைப் போலாகுமா?

அண்மையில் வெளி வந்த தமிழ் திரைப்பட பாடல் நினை வுக்கு வந்தது. அவசர அவ சரமாக குளித்துக் கொண்டாள்.

இன்னும் அரை மணி நேரத் துக்குள் பஸ்ஸை பிடித்துவிட வேண்டும். எவ்வளவு இயந்திர மான வாழ்க்கை. ஒய்வு என்பதே உறக்கத்தில் மட்டுந்தானா? நினை க்கும் போதே வேதனையாக இரு ந்தது.

வித்யாவுக்கு 20 வயது தான் இருக்கும். ஊரில் ஏ.எல் படித்தும் பரீட்சை எடுக்க முடியாமல் போன துர்பாக்கியசாலி. ஐந்து பிள்ளைகளில் மூத்தவள் வித்யா. கடைசித் தம்பி வினோத்தை விடமற்ற அனைவரும் பெண் பிள்ளைகள். மத்தியதர வகுப்பைச் சேர்ந்த வித்யாவின் தகப்பனார் ஒரு கமக்காரர்.

வித்யா வெளிநாட்டுக்கு வந்து ஏறக்குறைய இரண்டு வருடங் களாகிவிட்டது. இந்த இரு வரு டங்களில்தான் எத்தனை மாற் றங்கள். விவேக்கை அவள் முதல் முதல் ஒரு பிறைவேற் ரியூ ட்டறி ஒன்றில் தான் சந்தித்தாள். காதல் என்ற அத்தியாயத்தை எழுத ஆரம்பித்து இன்றுடன் மூன்று வருடங்களாயிற்று. விவே க்கை சந்தித்த முதல் நாட்கள் அவள் வாழ்க்கையில் மறக்க முடியாத நாட்கள். இளமை என்ற பூங்காற்று கண்கள் என்ற மல ரூடாக வீசிய காலங்கள் அவை. நாடு மட்டும் நன்றாக இருந் திருந்தால் ஒருவேளை இருவரும் பல்கலைக்கழகத்தில் இருந்திருப் பார்கள்.

விவேக்கின் கடிதம் இன்று எப்படியும் வந்துவிடும். அவள் மனம் அடிக்கடி கூறிக்கொண் டது. இது இன்று மட்டுமல்ல இன்றோடு மூன்று வாரங்களாக கூறிக்கொள்ளும் மந்திரம் இது. எதிர்பார்ப்புக்கள் நீண்டு கொண் டே போகின்றது. ஒரு வேளை விவேக் என்னை மறந்து போனால்.......அவளால் நினைத் துக் கூட பார்க்க முடியவில்லை. சே... என்ன மடைத்தனம், அர்த்தமற்ற கற்பனைகள். அவள் தனக்குள்ளே சமாதானம் கூறிக் கொண்டாள்.

## சிறுகதை

வாழ்க்கையில் நிம்மதியாக இருக்க எத்தனை மனங்கள் ஆசைப்படுகின்றன. ஒரு வருடத் திற்காவது அல்லது ஒரு மாத த்திற்காவது ஏன் குறைந்தது ஒரு நாளைக்காவது. இது நடக்குமா? சராசரி நினைவுகளையும் கனவு களையும் சுமந்து கொண்டு திரி ந்த இளைஞர் கூட்டம் எப்படி திசைமாறி விட்டது. முன்னுக்கு இருந்த வெள்ளைக்காரனிடம் இருந்த பத்திரிகை ஒன்றில் இரு ந்த செய்தி ஒன்றில் அவள் கவ னம் திசை திரும்பியது.

இலங்கையிலிருந்து அகதிகள் வருகை. நான்கு பொதுமக்கள் சுட்டுக் கொலை.

வித்யா தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். தன் பெயர் மாற் றப்பட்டு இன்றுடன் மூன்று வருடங்கள் ஆகிவிட்டது.

இவள் ஒரு அகதி.

அன்று அந்தக் கடையில் ஒரு வர் இன்னொருவருக்கு அறி முகம் செய்த போது கூறிய வசனம் அது.

என்ன உலகம் இது எங் கேயோ எப்படியோ இருந்த வாழ் க்கை இங்கே இப்படி சே..

அவளுக்கு நினைக்கும் போதே அழுகை வந்துவிடும் போலி ருந்தது.

எத்தனையாயிரம் கனவுகள் சிதைக்கப்பட்டிருகின்றன. எத்த னை பேருடைய ஆசைகள், அபி லாசைகள் அடியோடு நாசமாக்கப் பட்டிருக்கிறது. இன்னும் பிரச்ச னைகள் ஒய்ந்த பாடில்லை. ஒய்வு கொடுக்க யாருக்கும் விருப்பமும் இல்லை.



நாட்டுக்கான போராட்டம் என்று நாய்கள் மாதிரி ஒருவரை ஒருவர் சுட்டுக்கொள்கிறார்களே. துப்பாக்கியும் குண்டுகளும் ஒரு சமூகத்துக்கு அல்லது ஒரு பிரச் சனைக்கு தீர்வாகுமா? கலையும் கல்லூரிகளும் இருந்த நாட்டில் இன்று கொலையும் கொள்ளை களும் அல்லவா இடம் பெற் றுக்கொண்டு இருக்கின்றது. எப் படி இருந்த நாடு எப்படிப் போய் விட்டது.

கடையில் ஒரே கூட்டமாக இருந்தது. வித்யாவுக்கு ஒய்வே கிடைக்கவில்லை இயந்திரம் போல கைகள் அசைந்து கொண் டிருந்தது. அப்பாவை அடிக்டி நினைத்துக் கொண்டாள். 'வித்யா நீ நன்றாக படித்து ஒரு ஆசிரி யராக வரவேண்டும். அதுவும் இந்த கிராமத்திலேயே. என் கண் முன்னாலேயே நீ படிப்பிக்க வேண்டும்' என்ன விபரீதமான ஆசை. தன் தகப்பனை நினைக்க பாவமாக இருந்தது. ஒரு ஏழை விவசாயின் சின்ன ஆசைகள் அவை. ஆனால் இன்று அதற்கு எதிர்மாறாக கடல் கடந்து வந்து பெயர் மாற்றப்பட்ட நிலையில் சம்மந்தமில்லாத வேலைகள்.

வித்யாவிடம் மேற்பார்வை யாளர் வந்து ஒய்வெடுக்கும்படி கூறிவிட்டு போனது அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அப் பாடா கைப்பையை எடுத்துக் கொண்டு ஒய்வு அறையை நோக்கி ஓடினாள். அவள் கைகள் ஆவலாக எதையோ தேடின. அவை வேறு ஏதுமல்ல மூன்று வாரங்களுக்கு முன் விவேக்கிடம் இருந்து வந்த கடிதங்களே அவை. அவற்றை அவள் எத் தனை முறை படித்திருப்பாள் என்பது அவளுக்கே தெரியாது. ஒவ்வொரு நாளும் ஒய்வு கிடை க்கும் போதெல்லாம் அதை வாசி

ப்பதுதான் அவளது பொழுது போக்கு. அவன் நினைவுகள் விவேக்கை சுற்றி வட்டமிட்டன.

அவன் ஒரு கவிதை. அவ னுடைய எழுத்துக்கள் ஒவ்வொ ன்றும் உள்ளங்களின் ஆழமான சிந்தனைகள். எழுத்துக்களுக் கேற்ப செயல்களும் கூட புரட் சியாக புதுமையாக இருக்கும். எதையாவது சாதிக்க வேண்டும் என்ற வெறி. எல்லாவற்றுக்கும் முட்டுக்கட்டையாக அவனுடைய வறுமை. அவளுக்கு அவனிடம் பிடித்ததே அவனுடைய கற்பனை கள்தான். அவள் கண்கள் கடி தத்தை வாசிக்கத் தொடங்கியது.

வித்யா!

நீ எனக்கு விடியற்கால பூபா ளம் மட்டுமல்ல நான் விழித் தெழும்ப உதவும் அலாரமும் கூட. கோடைகாலத்து வெயிலை விட உன் நினைவுகளுக்கு வெ ட்கை அதிகம். அதனால் தானோ என்னவோ நான் பல நாட்களில் காய்ந்து, நலிந்து போய் விடு கிறேன்.

கண்களில் உன்னை சிறை பிடித்து மனதினுள் உன்னை பூட்டி வைத்துக் கொண்டு நினைவுகள் என்ற காவல்க் காரனை நியமித்தேன். ஆனால் நீயோ அவற்றை கனவுகள் என்ற ஆயுதம் கொண்டல்லவா உடைத் துக்கொண்டாய். அது எப்படி.

பல விடை காண முடியாத கேள்விகளை என்மனதுக்குள் ஏற் படுத்தி விட்டு, நீ எங்கோ தொலைதூரத்தில் இருந்து என் னை ஆட்டி வைத்துக் கொண் டிருக்கிறாய். அது எப்படி உன் னால் முடிகிறது.

கடிதத்தை கண் இமைக்காமல் படித்துக் கொண்டிருந்தாள் வித் யா. அவள் கடிதத்தின் இறுதிப் பகுதியை அண்மித்த போது அந்த வரிகள் அவளை ஒரு கணம் அதிர்ச்சி பெற வைத்தது.

வித்யா உனக்கு ஞாபகம் உண்டா அந்த மாமரம். நாம் முதன் முதலில் சந்தித்தோமே அந்த மரம், நம் உறவுக்கும் உணர்வுக்கும் காரணியாகிய மரம், நேற்று காற்றில் அடிபட்டு விழுந்து விட்டது.

அந்த வரிகளிலேயே சற்று ஊறிப்போன அவளின் நினை வுகள் மீண்டும் திரும்பிய போது அவளது இடைவேளை நேரம் முடிந்து விட்டதை உணர்ந்தாள்.

திரும்பி அவளது ரில்லுக்கு போனாள். கியூ கூடக் கூட அவள் கைகள் வேகமாக இயங் கியது. என்ன இயந்திர வாழ்க்கை இது. ஒய்வற்ற இந்த வாழ்க் கைக்கு ஒய்யாரம் தேடும் இந்த

மனதுக்கும் தான் எத்தனை போட்டிகள். வித்யா கடிகாரத் தைப் பார்த்தாள். இன்னும் வேலை முடிவதற்கு ஐந்து நிமிடங்கள் இருந்தது. இன்னும் அரை மணி நேரத்துக்குள் வீடு போய் சேர்ந்து விடலாம். எப்ப டியும் இன்று விவேக்கின் கடிதம் வந்திருக்கும். வேலை முடிந் ததும் வேக வேகமாக இரயில் எடுத்துக் கொண்டாள். வீடு வந் து சேர்ந்தாள்.அவசர அவசரமாக கதவைத் திறந்தாள். அவள் கண்கள் ஆவலோடு விவேக்கின் கடிதத்தைத் தேடியது. இன்றும் ஏமாற்றம். அவளுக்கு அழுகையே வந்தது. இன்றும் கடிதத்தைக் காணவில்லையே! ஒரு நிமிடத்து க்குள் அவள் சோர்ந்து விட்டாள். எட்டுமணி நேரங்கள் வேலை செய்த களைப்பை விட இது கூடுதலாக இருந்தது. காதல் என்பது எவ்வளவு கொடியது. காத்திருப்பது என்பது அதை விடக்கொடியது. அவள் தனக் குள்ளேயே கூறிக்கொண்டாள்.

நாளை வரலாம் என எண் ணியவாறே உண்ண மறந்த நிலையில் உறக்கத்தை நாடினாள் வித்யா. நாளை கடிதம் வரும் என்ற எண்ணத்துடன் படுக் கையை அணைத்துக் கொண்ட அவளுக்கு எங்கே தெரியப் போகிறது விவேக் ஒரு கலைந்து விட்ட கனவு என்று. ஆம் அவன் இந்த உலகை விட்டு பிரிந்து இன்றுடன் மூன்று வாரங் களாகி விட்டது.

காதலன்: எனக்கு முன்னாடி வேற யாரையாவது காதலிச்சிருக் கிறியா?

காதலி மௌனமாயிருக்கிறாள்.

காதலன்: என்ன பதிலே சொல்லலை?

காதலி: எண்ணிக்கிட்டு இருக்கும் போது குறுக்கே பேசாதிங்க.



" 'கேளடி கண்மணி' படம் பார்த் துட்டு வந்ததுலேர்ந்து என் அம்மாவும் மனைவியும் முன்னே மாதிரி சண்டை போடறதில்லே..."

"வரவாமில்லையே! சமாதான மாயிட்டாங்களா?"

"இல்லே. இப்பல்லாம் மூச்சு விடாமே சண்டை போடறாங்க!"

www.tamilarangam.net



# தொடரும் மனித உரிமை மீறல்கள்

(அம்னஸ்டி இன்டர்நேஷனல் அறிக்கை)

amnesty international

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கைது செய்யப்பட்டவர்களைப் பெருமளவில் சித்திரவதை செய்வதாக அம்னஸ்டி இன்டர் நேஷனலுக்குத் தகவல் கிடைத்துள்ளது. சித்திரவதையின் விளைவாகப் பலர் இறந்தும் உள்ளனர். தடி கொண்டு அடிப்பது, சவுக்குக்கட்டை கொண்டு அடிப்பது போன்றவை வழக்கமான சித்திரவதைகள் ஆகும். கால் பாதங்களும், ஆண்குறிகளும் பொதுவாகத் தாக்கப்படும் இடங்கள் ஆகும். கட்டைவிரலால் கட்டித் தொங்கவிடப்பட்ட நிலையில் அடிப்பதும் சித்திரவதையில் ஒரு வகை. பெஞ்சுகளில் கட்டி வைத்து பைப்களும், ராடுகளும் கொண்டு தாக்குவது; ஒவ்வொரு முடியாகப் பிடித்திழுப்பது; எரியும் மிளகாயிலிருந்து வரும் புகையை சுவாசிக்க நிர்ப்பந்திப்பது; வாய், ஆண்குறி மற்றும் ஆசனத்துவாரத்தில் மிளகாய்ப் பொடியைத் திணிப்பது ஆகியவை முக்கியமான சித்திரவதை முறைகள் ஆகும். 'தர்ம சக்கரா' (புத்தரின் போதனை சக்கரம்) என்றொரு 'சிறப்பான' சித்திரவதை முறையும் ஸ்ரீலங்காவில் பிரபலம். கைதியை நிர்வாணமாக்கி, உட்கார்ந்த நிலையில் கைகள், முகம் மற்றும் முட்டி ஆகியவை ஒரே நேர் கோட்டில் வரும்படி கட்டி, கால்களுக்கிடையே ஒரு கம்பை நுழைத்து அதில் தொங்கவிட்டு சுழற்றி அடிப்பது தான் 'தர்ம சக்கரா'.

ஜே.வி.பி என்று சந்தேகிக்கப்படுபவர்களின் உறவினர்களும் சில சமயம் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளுக்கு ஆட்படுத்தப் படுகின்றனர். கமரலாவாகே சமமாந்திலக என்ற 16 வயதுப் பெண்ணிக்கு நிகழ்ந்த கொடுமையைப் பார்ப்போம். இவரின் சகோதரர்கள் ஏற்கனவே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டு விட்டனர். 1988 மார்ச் 9 அன்று இரவு சுமார் 8 மணிக்கு சமரலாவாகே சம்மாந்திலகவும் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் கூறுகின்றார்:

'சி.ஐ.டி என்று கூறிக்கொண்டு ஆயுதம் தாங்கி வந்த ஒரு பொலிஸ் படை நான் என் பெற்றோருடன் உணவருந்திக் கொண்டிருக்கும் போது எங்கள் வீட்டை முற்றுகை இட்டனர். ஒரு அதிகாரி அவருடன் என்னைப் பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி கூறினார். இதனை என் தாயார் கடுமையாக ஆட்சேபித்தார். உடனே அவர் என் தாயாரையும் உடனே வரும்படி ஆணையிட்டார். ஆனால் எங்கள் தந்தை எங்களுடன் வருவதை அவர்கள் அனுமதிக்கவில்லை. நானும், எனது தாயாரும் பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டோம். பயணம் செய்யும் போது மிகவும் கொச்சையான வார்த்தைகளினால் பொலிஸார் என்னையும் என் தாயாரையும் கேவலப்படுத்தினர். அத்தங்கல ஆறு அருகில் வண்டியை நிறுத்தி என் தாயாரை ஓடும் நதியில் குதிக்கும்படி நிர்ப்பந்தித்தனர். நான் பயத்தினால் கத்தினேன். பின்னர் காவல் நிலைய வாயிலில் என் தாயாரை வண்டியில் இருந்து தள்ளிவிட்டு என்னை மட்டும் இழுத்துச் சென்றனர். அப்போது நேரம் 10 மணி இருக்கும் கைது செய்யப்பட்டுள்ள என் இரண்டு சகோதரர்களைப் பற்றியும் விசாரித்தனர். பின்னர் சில பெயர்களைக் கூறி அவர்கள் என்னுடைய சகோதரர்களின் நண்பர்கள் என்று கூறி அவர்களது விலாசத்தை விசாரித்தனர். எனக்கு அது பற்றி ஏதும் தெரியாது என்று கூறியவுடன் ஒரு அதிகாரி என்னை லத்தியினால் பலமுறை அடித்தார். இதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டு, பல முறை தொடர்ந்து அடித்து என்னை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றனர். அந்த அறையில் என்னை இருவர் தாக்கினர்..... பிறகு என்னுடைய நான்காவது சகோதரன் சுகத் கமலஸ்ரீயை கைகளைக் கட்டி, அதனுடன் அவனுடைய கால்களைக்கட்டி, கால்களுக்கிடையில் ஒரு கம்பைச் செலுத்தி, முகம் தரையை பார்த்தவாறு இருக்குமாறு என் எதிரில், இரண்டு மேஜைகளுக்கிடையில் தொங்கவிட்டனர். நான் காணும் வகையில் அவனை அடிக்கத் தொடங்கினர். அதைக் காண சகிக்காமல் என் தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டவுடன், ஒரு அதிகாரி என் முடியைப் பிடித்து இழுத்து, என் சகோதரனை அடிப்பதைப் பார்க்கும்படி கட்டளையிட்டார்.

என் சகோதரனை அடித்த அதே நேரத்தில், ஆபாசமான சொற்களைப் பயன் படுத்தி அவனுடைய நண்பர்களைப் பற்றி என்னிடம் விசாரணை நடத்தினர். என் பதிலில் திருப்தி அடையாமல், என் சகோதரன் எதிரில் என்னைத் தாக்கினர். ஐந்து முறை என்னையும் என் சகோதரனையும் இவ்வாறு மாறி மாறி அடித்தனர். இதன் காரணமாக என்னுடைய கைகளும் விரல்களும் வீங்கி விட்டன. சித்திரவதை தாங்காமல் நான் மயக்கமடைந்தேன்.

30 நிமிடங்கள் கழித்து மீண்டும் விசாரணையைத் துவங்கினர். நானும் என் சகோதரனும் பேசும் நிலையில் கூட அப்பொழுது இல்லை. எங்கள் நிலைமையும் பொருட்படுத்தாது, எங்களை மீண்டும் தாக்கத் துவங்கினர். பின்பு, 'நாளைக்கு' என்று கூறி அறையை விட்டு பொலிஸ் அதிகாரிகள் வெளியேறினர்.'

பெப்ரவரி, 11, 1988 அன்று சம்மாந்திலகே விடுதலை செய்யப்பட்டார். தான் சித்திரவதைகளுக்கு உட்பட்டதாக அவர் ஒரு அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்தார். அந்த வழக்கின் நிலையைப்பற்றி அம்னஸ்டி இண்டர் நேஷனலுக்கு செய்தி ஏதும் கிடைக்கவில்லை.

பிரிதிஸ் என்ற இரண்டாம் ஆண்டு வணிகவியல் மாணவருக்கு ஏற்பட்ட சித்திரவதைகளைப் பற்றியும் நிறைய தகவல்கள் அம்னஸ்டி இண்டர் நேஷனலுக்கு வந்துள்ளன......

பொலிஸ் காவலில் இருக்கும் போது, ஒருவர் இறந்து போனதைத் தொடர்ந்து, பொதுமக்கள் மத்தியில் கடும்கண்டனம் எழுந்தது. 1988 செப்டம்பர் 2ம் திகதி ஜே.வி.பி யுடன் தொடர்புள்ளதாக சந்தேகிக்கப்பட்ட வி.ஜி. தாசலியவினாராச்சி என்ற வழக்கறிஞர், பொலிஸ் காவலில் இருக்கும் போது ஏற்படுத்தப்பட்ட காயங்களின் விளைவாக கொழும்பு மருத்துவமனையில் இறந்துவிட்டார்.

அவரது கழுத்துப்பகுதியில் இருந்த காயங்கள் கைகளினால் கழுத்தை நெரித்ததினால் ஏற்பட்டிருக்கலாம். முன்கை எலும்பின் அருகே பல காயங்கள் தெரிவதால், அவரது கைகளைக் கட்டித் தொங்கவிட்டு இருக்கும் சாத்தியக்கூறு இருக்கிறது. இக்காயங்கள் வழக்கமான பொலிஸ் தாக்குதலினால் ஏற்படக்கூடியதை ஒத்து இருந்தது. இக்காயங்களினால் இறந்தவர் கடும் உடல் வலிக்கு ஆட்கப்பட்டிருக்க

அவரது சாவு பற்றிய பிரேதப் பரிசோதனை அறிக்கை, அவரது உடலில் நூற்றுக்கும் மேற்பட்ட உட்காயங்கள் இருந்ததாகத் தெரிவிக்கின்றது. மேலும் அந்த அறிக்கை இவ்வாறு கூறுகிறது:

'இறந்தவர் ஒரு ஆரோக்கியமான வயது வந்த ஆண்மகன் அவர் சாகக்கூடிய வகையில் எந்த நோயும் இருக்கவில்லை மரணம் விளைவிக்கும் ஆயுதங்களின் மூலம் ஏற்படுத்தப்பட்ட தசைகாய கிழிப்பினாலும், எலும்பு முறிவுகளினாலும், இரத்த ஓட்டத் தடைகளினாலும் சாவு ஏற்பட்டிருக்க வேண்டும். இந்தக் காயங்கள் பொலிஸ் லத்தியினாலோ, சவுக்குக் கம்பினாலோ அல்லது மணல் நிரப்பப்பட்ட குழாய்களினாலோ தாக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்கவேண்டும். வேண்டும். அவரது மார்பில் ஏற்பட்ட காயங்களினாலும் விலா எலும்பு முறிவினாலும் சுவாசிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வழக்கு குறித்து ஒரு பொது விசாரணை வைக்கப்பட்டது. அட்டர்னி ஜெனரல் கட்டளைப்படி கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட மூன்று பொலிஸ் அதிகாரிகளின் மீதும் வழக்கு தொடரப்பட்டது. அவர்களுக்கு ஜாமீன் அளிக்கவும் நீதி மன்றம் மறுத்து விட்டது. 1988 மார்ச் தொடக்கம் செப்டம்பருக்கிடையே மேலும் 8 பேர் பொலிஸ் காவலில் இறந்துள்ளதாக செய்திகள் வெளிவந்த போதும் அவற்றைப் பற்றி விசாரணை எதுவும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.






RANJIT & COMPANY

SOLICITORS

Tel: 081-767 9717
Fax: 081-767 9684

1st Floor,
176, Mitcham Road,
Tooting,
London SW17 9NJ

Freehold
Leasehold

Conveyancing
Residential & Commercial
FIXED FEE

COMPETITIVE QUOTES BY PHONE
7 DAYS A WEEK
FOR SPEEDY CONVEYANCING PHONE NOW

IMMIGRATION
MATRIMONIAL & INJUNCTION WORK
LANDLORD & TENANT DISPUTE
ACCIDENT CLAIMS
LICENSING

HOUSING PROBLEM
MORTGAGE ARREARS
HARRASSMENTS
TENANCY AGREEMENT
NOTICE TO QUIT

REPRESENTATION AT POLICE STATION IS COVERED BY
LEGAL AID ALL CRIMINAL COURT WORK UNDER TAKEN
PHONE 081-767-9717


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்

— காயத்திரி கொன்ஸ்டன்ரைன் —

1990 ஆம் ஆண்டு ஜூன் யுத்தத்தின் பின் கொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களை எட்டிவிட: சமாதானம் பேச்சுவார்த்தை தீர்வு என்ற ஒலிகளும் ஆங்காங்கே பரவலாக ஒலித்துக் கொண்டிருக் கின்றன. ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் புலிகளைச் சந்திக்க யாழ்ப்பாணம் விஜயம் செய்யப்போவதாக வதந்தி ஒருபுறம் புலிகளுக்கும் அரசிற்குமிடையிலான பேச்சுவார்த்தை ஐரோப்பிய நாடொன்றின் தலைநகரில் நடாத்த ஒழுங்குகள் செய்யப்படுவதாக இன்னுமொரு வதந்தியும் பரவலாக பேசப்பட்டு வருகிறது. வெறும் வாய்பிசப்பிகளுக்கு அவல் கிடைத்தது போல் கொழும்பு பத்திரிகைகள் இதனை ஆதாரமாக வைத்துக்கொண்டு பக்கம் பக்கமாக கட்டுரைகள் எழுதித் தமது பக்கங்களை நிறைத்துக் கொள்கின்றன. இது போதாதென தற்போது கொழும்பில் தங்கியுள்ள முன்னைய தமிழ் விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் பிரேமதாசாவையும் அவரது சமாதான முயற்சிகளையும் ஆகா ஒகோ என புகழ்ந்து அறிக்கைகள் விடுகின்றன. புலிகளை அந்நியப்படுத்த தீர்வு யோசனைகளை முன்வையுங்கள் என ஜனாதிபதியை வேண்டுகிறார் புளட் தலைவர் மாணிக்கதாசன். பிரேமதாசாவின் தலைமையின் கீழ் தமிழ்பேசும் மக்களுக்கு உரிமை கிடைப்பது நிச்சயம் என அடித்துக் கூறுகிறார் ஈ.பி.டி.பி. செயலாளர் திரு டக்ளஸ் தேவானந்தா. தமிழ் பேசும் மக்களின் ஒட்டுமொத்தமான விடுதலையில் நம்பிக்கை வைப்பது அவசியம் தான். நம்பிக்கையின் அடிப்படையில் தான் இலட்சியமே பிறக்கிறது. **ஆனால் யார் யார்மீது** நம்பிக்கை வைப்பது என்ற விவஸ்தை கூட இப்போது அற்றுப்போய்விட்டதா? திட்டமிட்டு எமது இல்லங்களை எரித்துவிட்டு தமிழர்களுக்கு ஈழம் அல்ல நல்ல இல்லம் தருவேன் என்று கதைவிடும் சமூகப் பணியாளன் மட்டில் தமிழினம் மிக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எமது பிரச்சனைகளுக்கெல்லாம் அடித்தளமாக. விளங்கும் ஒருவனிடமே அதற்காக விடிவை கேட்பது எவ்வளவு குருட்டுத்தனம் .........? தமிழர்களின் அரசியல் விடுதலை மேடையை அலங்கரித்த அனைவரும் வெவ்வேறு கால கட்டங்களில் கொழும்பு அரசாங்கத்துடன் தேனிலவுக்கு சென்றவர்கள்தான். இதில் ஒருவர் கூட விதிவிலக்கல்ல. கொழும்புடன் ஓர் பரஸ்பரம் ஒரு புரிந்துணர்வு இருப்பது அவசியம் தான். அவை ஒரு வித ராஜதந்திரம்தான் என்றொரு வாதம் கூட பல சந்தர்ப்பங்களில் கூறப்பட்டது. சேர் பொன்னம்பலம் தொடங்கி செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஊடாக இன்றைய பாலசிங்கம், சித்தார்த்தன், டக்ளஸ் வரை வெவ்வேறு காரணங்களுக்காக கொழும்பின் தயவை நாடினர். இதில் எந்தத் தமிழ் குழுவும் விதிவிலக்கில்லை. அன்றைய ஜயவர்த்தனாவையும் இன்றைய பிரேமதாசாவையும் இந்திரன் சந்திரன் என்று சகலரும் வெவ்வேறு தருணங்களில் அறிக்கை விட்டனர்.

> எமது பிரச்சனைகளுக்கெல்லாம் அடித்தளமாக விளங்கும் ஒருவனிடமே அதற்கான விடிவைக்கேட்பது எவ்வளவு குருட்டுத்தனமானது?

இவற்றில் குறிப்பாக கவனிக்கவேண்டியது யாதெனில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு தமிழ் குழுக்கள் சிங்கள ஆட்சியாளர்களுடன் இணக்கம் வைத்துக்கொண்ட போதெல்லாம் அவை இலங்கை அரசினால் மிகவும் தந்திரோபயமாக தமிழினத்தின் ஒட்டுமொத்தமான விடுதலைக்கு எதிராக பாவிக்கப்பட்டது.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சனை நியாயமான முறையில் தீர்க்கப்படல் வேண்டுமென்ற இதயசுத்தியுடன் ஏதாவது ஒரு தமிழ் குழுவுடன் இலங்கை அரசாங்கம் தனது நல்லுறவை விருத்தி செய்திருந்தால் நிச்சயமாக தமிழ்பேசும் மக்களும் சிங்கள மக்களும் இவ்வளவு சிக்கலில் மாட்டியிருக்க மாட்டார்கள். இதை நிரூபிப்பதற்கு வரலாற்றின் அதிக பக்கங்களை புரட்ட வேண்டிய அவசியம் இல்லை. 1983 இற்கு பின் கூட்டப்பட்ட வட்ட மேசை மாநாடு கூட அன்றைய ஜனாதிபதி ஜயவர்த்தனைவால் ஒரு நல்ல நோக்கத்திற்காக கூட்டப்பட்டிருந்தால் எங்காவது ஏதாவது ஒரு உடன்படிக்கை ஏற்பட்டிருக்கும். அன்று கூட்டப்பட்ட வட்ட மேசை மாநாடு அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, வெளியுறவுச் செயலாளர் நரசிம்ம ராவ், இந்திய விசேட பிரதிநிதி பார்த்த சாரதி ஆகியோர் மீது கரி பூசும் நிகழ்ச்சியாகவும் காலத்தை கடத்தவும் நடாத்தப்பட்டது. இதில் அன்றைய பிரதமர் ரணசிங்க பிரேமதாசாவின் பங்கு எத்தகையது என்பதை யாவரும் அறிவர்.

அன்று ஜி.ஜி பொன்னம்பலத்தின் உறவை வைத்துக்கொண்டு செல்வநாயகத்திற்கு குழிபறித்த சிங்கள அரசியல் தலைவர்கள், பின்னர் அமிர்தலிங்க்தின் உறவை வைத்துக்கொண்டு தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு முட்டுக்கட்டை போட்டனர். அதன் பின் புலிகளின் உறவை வைத்துக்கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். இற்கும் இந்திய அரசிற்கும் குழிபறித்த சிங்கள அரசு இன்று புளட், ஈ.பி.டி.பி., ரெலோ ஆகியோரின் துணையை வைத்துக்கொண்டு புலிகளுக்கு குழிபறிக்க முயலுகின்றனர். ஆக மொத்தமாக சிங்கள அரசாங்கம் தமிழ் குழுக்களுடன் வைத்துக் கொண்ட உறவு அனைத்தும் தமிழ் பேசும் மக்களின் ஒட்டுமொத்தமான விடுதலைக்கு எதிராக பயன்படுத்தப்பட்டுள்ளன.

இது நாம் கண்ட வரலாற்று உண்மை. இதை எவரும் மறுக்க முடியாது. இன்று கொழும்பில் தங்கியுள்ள எந்த ஒரு தமிழ் குழுவுக்கும் அரசிற்கும் இடையிலுள்ள உறவு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கூட்டமைப்பு என்று யாராவது ஒரு அரசியல் விமர்சகனும் கூற முற்படுவானாகில் ஒன்று அவர் பொய் சொல்கிறார் அல்லது அவர் ஒரு ஏமாந்த சோணகிரியாகத் தான் இருக்கவேண்டும்.

சில தமிழ் குழுக்களின் பிரதிநிதிகள் கூறுவது போல இன்றைய யுத்தம் புலிகளுக்கெதிரான யுத்தம் மட்டுமே என்ற கருத்தில் உண்மையிருந்தால் கொழும்பு குண்டு வெடிப்புக்கு ஏன் முல்லைத்தீவில் தமிழ் மக்களின் வீடுகளை எரிக்க வேண்டும்? ஆனையிறவுத் தாக்குதலுக்கு ஏன் மட்டக்களப்பில் அப்பாவித் தமிழ்பேசும் மக்களை சுட்டுத்தள்ள வேண்டும்??. எந்த ஒரு கால கட்டத்திலும் ஸ்ரீலங்கா அரசின் இராணுவம் எந்த ஒரு குழுவிற்கும் எதிராக செயற்படவில்லை. அவை எப்போதும் சகல தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகத்தான் செயற்பட்டன. செயற்படுகின்றன. செயல்படப்போகின்றன.

1956 இல் பண்டா -செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஊர்வலம் வைத்த ஜெயவர்த்தனாக்களும் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகமிருந்த தமிழ் பிரதிநிதிகளை குண்டாந்தடி கொண்டு தாக்கியது மட்டுமல்லாது உங்களுக்கு போரா சமாதானமா வேண்டுமென சூழுரைத்த பண்டாரநாயக்காக்களும் ராஜிவ் - ஜே.ஆர் ஒப்பந்தம் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு கொடுக்கப்படவிருந்த உரிமையில்லாத சில சலுகைகளைக்கூட இன்று தமிழ் பேசும் அவர்களின் உரிமைகளைக் கொடுக்கப் போகிறார்கள் என்று கூறுவதை நினைக்கும் போது உண்மையில் அழுவதா சிரிப்பதா என்றுகூட தெரியவில்லை.

அண்மையில் வட கிழக்கு பகுதியில் சமூக பணியில் ஈடுபட்டுள்ள அரசு சார்பற்ற ஸ்தாபனமொன்றின் வெளிநாட்டு பிரதிநிதி ஒருவருக்கு ஸ்ரீலங்காவின் உயர் ராணுவ அதிகாரி ஒருவர் கூறிய கருத்தொன்று எமது பல கேள்விகளுக்கு பதிலளிக்கும். ஸ்ரீலங்கா அரசின் நோக்கங்களை பக்கம் பக்கமாக எழுதுவதை விட அவரின் கூற்றை நான்கு முறை வாசித்து அதன் உள் கருத்தை புரிந்து கொண்டாலே எமது விடுதலைக்கான மேலொரு படியில் கால்வைத்ததற்கு சமனாகும்.

தெற்கில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் மிகவும் நல்ல முறையில் அடக்ககப்பட்டுவிட்டன. இந்நோக்கத்திற்காக 60000 சிங்கள மக்களை நாம் கொன்று குவித்தோம். எமது நோக்கத்திற்காக எம்மவர்களையே நாம் பெருமளவில் கொன்று குவிக்கும் போது வட கிழக்கை பற்றி நாம் ஏன் அதிகளவில் அலட்டிக்கொள்ள வேண்டும். நிச்சயமாக நாம் எமது நோக்கத்தை வெற்றிபெறச் செய்வோம்.

எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன் என்ற தலைப்பு புதிய உலகம் சஞ்சிகையின் ஸ்தாபகர் வண பிதா கரவையூர் செல்வத்தின் அனுமதியுடன் ஈழ பூமியில் பயன்படுத்தப்படுகிறது. இத் தலைப்பைப் பயன்படுத்த அனுமதியளித்த புதிய உலகம் சஞ்சிகையின் ஸ்தாபகர் வண பிதா செல்வத்திற்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.


## London Academy of Computing & Electronics

58A Upper Tooting Road, London SW17 7PB, UK

Tel: 081-767 4698

London Academy of Computing & Electronics provides full time FE courses in Business Studies, Computing and English for UK and overseas students at competitive rates. LACE is a member of NCC and is recognised by professional bodies and examination boards including ABAC, ACP, ABE, AAT, IOS, ACEA, City & Guilds, FBA, and IDPM. Recognised by the British Home Office as a bona-fide college for visa requirements. Full student support and advisory service for overseas students. Students affiliated to NUS. One of the best value-for money college in London.

### ABE COURSES

**ABE Certificate, Diploma and Advanced Diploma in Business Administration**
Three six month courses leading to ABE Certificate, Diploma and Advanced Diploma.
Intake: January and July

**ABE Certificate in Hospitality Management**
A six month course leading to ABE Certificate. Intake: January and July

**ABE Single Subject Revision Courses**
Revision courses for students wishing to retake one or more subjects in ABE examinations.

### OTHER COURSES

**ABAC/ACP Certificate and Diploma in Business Computing**
A two year courses leading to the ABAC or ACP Diplomas. Intake: October and March.

**IDPM Parts I, II, III, IV**
A two year course leading to IDPM I-IV. Intakes: January and July.

**Computer Literacy**
Three and six month course in practical computing. Intakes: monthly

**Computer Programming**
A one year course in computer programming. Intakes: October and March.

**Office Software**
Tutorial classes in common office software including Database, Word-processing and Spreadsheet. Intakes: weekly

**LACE Diploma in Desktop Publishing and Print Management/ DTP Graphics Design**
One year course in DTP leading to the LACE Diplomas in DTP and Print Management/DTP and Graphics Design. Intakes: October and March.

**English for Foreign Students**
Six month and one year courses leading to Cambridge Preliminary and First Certificate in English. Intakes: October and March.



## Jeyam Electrical & Plumbing

★ Plumbing ★ Heating
★ Electrical Work
★ Bathroom Tiling ★ Plastering
★ Indoor & Outdoor Decoration

Also 24 hours Emergency work undertaken
For your information call Jeyam on 081-903 4646


www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் நாயகன் எம்.ஜி. ராமச்சந்திரன்



இந்தியாவின் பட்டி தொட்டிகளில் எல்லாம் 'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் அது முடிந்த பின்னாலும் என் பேச்சிருக்கும்' என்ற கவிஞர் வாலியின் பாடல் மறைந்த தமிழ்நாட்டு முதல்வரும் மக்கள் மனதில் நீங்காத இடம்பெற்றவருமான எம்.ஜி.ராமச்சந்திரனின் புகழை இன்றும் பரப்பிக் கொண்டிருக்கிறது.

*1936*-ல் சினிமா உலகிற்கு வந்த எம்.ஜி.ஆர். *1976* வரை சரியாக நாற்பதாண்டுக் காலம் நீடித்திருக்கிறார். தமிழ் சினிமா வரலாற்றில் வேறு எந்தக் கலைஞரும் இந்தச் சரித்திரம் படைத்ததில்லை.

வாழ்வின் கீழ்க்கோடியில் உள்ள மக்களோடு வாழ்ந்து பழகி வளர்ந்தவராகையால், அவர்களது ரசனையைய தமிழ் சினிமா உலகில் வேறு எவரைக் காட்டிலும் மிக அதிகமாகப் புரிந்து கொண்டவர் அவர்தான்.

*1947*-க்குப்பின் *1956* வரை அவர் கதாநாயகனாக நடித்த படங்கள் ராஜகுமாரி, மருதநாட்டு இளவரசி, மர்மயோகி, சர்வாதிகாரி, குமாரி, ஜெனோவா, மலைக்கள்ளன், குலேபகாவலி, அலிபாபாவும் *40* திருடர்களும், மதுரை வீரன் இவை ராஜாராணிக் கதைகள். அந்தமான் கைதி, என் தங்கை, நாம், பணக்காரி, கூண்டுக்கிளி, தாய்க்குப் பின் தாரம் இவை சமூகக் கதைகள்.

இந்த கதைகளில் மருதநாட்டு இளவரசி, மர்மயோகி, சர்வாதிகாரி, மலைக்கள்ளன், மதுரைவீரன், அலிபாபா படங்களின் வெற்றியில் இருந்து அவர் தமிழக மக்களின் ரசனையைப்புரிந்து கொண்டார்.

நிஜவாழ்வில் காணமுடியாத சாகஸங்களைச் செய்யும் மாவீரனாக எம்.ஜி.ஆரைத் திரையில் கண்ட தமிழ் மக்கள் மெய்சிலிர்த்தார்கள். இந்திய சுதந்திரத்திற்குப் பின் கிராமங்களில் மின்சார வசதி பெருகத்துவங்கி சினிமா பிரவேசிக்கத் தொடங்கியபோது, தாங்கள் கர்ணபரம்பரையாக கதைகளில் கேட்டுவந்த ராமன், பீமன், அர்ச்சுனன் ஆகிய மாவீரர்களுக்கு நிகரான வீரனாக எம்.ஜி.ஆரை, கிராம மக்கள் தரிசித்தார்கள்.

'மக்களின் தேவை 'ஒரு மாவீரன்' என்பதைப் புரிந்து கொண்டு தனக்கென ஒரு பாணியை, தனது படங்களின் வரவேற்புப் பெருகுவதன் படிக்கட்டுக்களை கணக்கிட்டு மெள்ள மெள்ள, உருவாக்கத் தொடங்கினார்.

அதற்கு முடிவும் கொடுத்து தனது சொந்தப் படம் நாடோடி மன்னனை உருவாக்கி வெற்றியடையச் செய்து 'இப்போது என்ன சொல்கிறீர்கள்?'



சதிலீலாவதியில் எம்.ஜி.ஆர்

என்று சவால் விட்டார். அவரது படங்கள் கிராக்கி அடையத் தொடங்க ஆரம்பித்ததும் ஒப்பந்தம் செய்ய வரும் தயாரிப்பாளர்களிடம் கதை என்ன என்று கேட்க ஆரம்பித்தார். கதையைச் சொல்லி முடித்தவுடனே அது வெற்றி பெறுமா, பெறாதா என்று கணித்துச் சொல்கிற ஆற்றல் அவரிடம் வளர்ந்தது.

எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றத்திற்கு அனைத்துல எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றம் எனப் பெயரிடப்பட்டது. எம்.ஜி.ஆர் படங்கள் வெளியாகும் போது தியேட்டர்களை அலங்கரித்தல், க்யூ வரிசையில் டிக்கெட் வாங்குவதற்காக கால்கடுக்க நிற்கும் ரசிகர்களுக்கு நீர்மோர் வழங்கல், திரையில் எம்.ஜி.ஆர் தோன்றும் போது கைதட்டுதல், மலர்மாரி பொழிதல் போன்ற பணிகளை ரசிகர் மன்றங்கள் செய்தன.

ரசிகர் மன்றங்களின் சார்பில் பொதுக்கூட்டங்கள் நடக்கத் தொடங்கின. அசோகன், திருச்சி சௌந்திராஜன் போன்ற நடிகர்களும் முசிறிப்புத்தனும் இக் கூட்டங்களில் பேசினர்.

இப்படியாக எம்.ஜி.ஆர் தன் திரையுலக வாழ்க்கையை பாமர மக்கள் மனதில் நிஜ வாழ்க்கையாக்கத் தொடங்கினார். *1967* ஜனவரியில் எம்.ஜி.ஆர் துப்பாக்கித் தாக்குதலுக்கு ஆளானார். ஜனவரி *12*-ம் நாளிரவு எம்.ஜி.ஆரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தனக்குத்தானே சுட்டுக் கொண்டதாக எம்.ஆர்.ராதா கைது செய்யப்பட்டார்.

கழுத்தில் பாண்டேஜுடன் கும்பிட்டவாறு இருக்கும் எம்.ஜி.ஆர். போட்டோ பிடிக்கப்பட்டு, உதயசூரியனுக்கு வாக்களிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுப்பது போல சுவரொட்டியைத் தயார் செய்து தி.மு. கழகம் தமிழ் நாடு முழுவதும் ஒட்டியது. தேர்தல் முடிந்தது. தமிழகத்தில் முதன் முதலாகக் காங்கிரஸ் அல்லாத அமைச்சரவையை தி.மு.கழகம் அமைத்தது. பரங்கிமலை தொகுதியில் எம்.ஜி.ஆர். வெற்றி பெற்றார். கூட்டணி அமைத்துத் தேர்தலில் நின்று தி.மு.கழகம் பெற்ற வெற்றியை 'சினிமாக் கவர்ச்சி'என்றே காங்கிரஸ் தலைவர்கள் வர்ணித்தனர். தமிழ்நாடு மாத்திரமல்லாது, இதர எட்டு மாநிலங்களிலும் காங்கிரஸ் தோல்வியுற்றிருந்தது.

## சினிமா





● ஹிந்தியில் சினிமா சான்ஸ் கிடைக்காவிடின் பயப்படாதீர்கள். தமிழுக்கு மாறுங்கள். அதுவும் கிடைக்காவிடின் வாத்தியார் வாரிசாகிவிடுங்கள்.

● பாடல் நீ, கதை வசனம், இசை எல்லாம் நீ, பிறகு ஏன் ஐயா படத்தை விடுகிறாய்.



சனத்தொகையைக் குறைக்க கல்யாணம் பண்ணிக்காம காதலிச்சுக்கிட்டே இருக்கணும், இறுதிவரை ஒண்டிக் குடித்தனம் தான். இப்படி பானுப்பிரியாவை 'பயமுறுத்துபவர் சத்தியராஜ். படம்-தெற்குத் தெரு மச்சான்.

## சீன்




நீ என்னைக் கல்யாணம் செய்யப் போகிறாயா? மாட்டாயா?என்று குஷ்புவுடம் கேட்கிறாரோ விஜயகுமார்.

படம்-[illegible]

## துணுக்குகள்


● உங்களிற்கு அஸ்மா வியாதியா, கேளடி கண்மணி போல் மூச்சு விடாது பாடுங்கள்.



● சனத்தொகையை குறைக்கவேண்டுமா? கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் காதலித்துக் கொண்டிருங்கள் எல்லாம் எம் சத்தியராஜ் அறிவுரைதான்.

● நீ பாதி நான் பாதி ....... , பச்சை மிளகாய் அம்மியில் வைத்து ......., போறபோக்கில் ஒன்டுக்கும் இரண்டுக்கும் என்ன பொருத்தம் அது 1 1/4, 1 1/2, 1 3/4 இப்படியும் பாடுவினமோ ?

● நடிகைகள் பெரும்பாலும் கடற்கரை செல்வதேன்? ஈவினிங் **Supper** ஒடு சுண்டலை முடித்து விட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**With compliments**

**T. Thiyagalingam**
**18, Nighttingale Lane,**
**London SW12 8TB**
**Tel: 081-675 1415**

***Contact for your needs in Insurance, Mortgage and Travel Requirements***


# இதுவரை பத்தாயிரம் பேர் மரணம்.

காயத்திரி கொன்ஸ்டன்ரைன்

1190 ஜூன் மாதம் மீண்டும் ஆரம்பித்த யுத்தத்தின் விளைவாக இதுவரை ஆகக் குறைந்தது 10,000 பேர் வரை மரணம் எய்தியுள்ளனர். அரச சார்பற்ற நடுநிலை ஸ்தாபனங்களால் தெரிவிக்கப்பட்டுள்ள இக்கணிப்பீட்டில் வடக்கில் 3000 பொது மக்களும் கிழக்கில் மேலும் 3000 பேரும் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க அண்மையில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் திரு வோஸ்டர் பெனாண்டோ கடந்த ஒரு வருடத்தினுள் 1369 பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்பட்டதாகவும் 585 பேரைக் காணவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியான புலிகள் தரப்பு செய்தியின் படி இது வரை 500 போராளிகள் வரை கொல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ள து.

## இலங்கையை விட்டு......

1ம் பக்க தொடர்ச்சி

னாமா செய்துவிட்டார் என்று தவறான செய்தியை அகில இந்திய வானொலிக்குக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.

## மக்கள் இலங்கையில்......

10ம் பக்க தொடர்ச்சி

ஒதுக்கியிருக்கும் அரசின் மொத்த செலவானது நூறுஆயிரத்து அறுநூற்றி ஒரு மில்லியன்களும் முன்னூற்றி அறுபதாயிரத்து அறுநூறு ரூபாய் (100,601,360,600) களாக மதிப்பிட்டிருக்கிறது நிதி அமைச்சு.

பணவீக்கம் 20 வீதத்தை எட்டியிருக்கும் இந்த வேளையில் தமிழ்பேசும் மக்களை கொன்று குவிக்க திட்டம் தீட்டும் ஸ்ரீ லங்கா அரசு இந்த வருடமும் பாதுகாப்புக்கு ஒதுக்கியிருக்கும் தொகையானது, அரசிற்கு பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் எண்ணம் கிடையாது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

வரவு செலவு திட்டம் வருமாறு!

மொத்த செலவு ரூ100,601,360,600. தேசிய கல்வி கொமிசன் ரூ678,632,000. பாதுகாப்பு ரூ15,249,976,000. அபிவிருத்தி அமைச்சுகள் ரூ21,856,088,000. பட்டினி ஒழிப்புத்திட்டம் ரூ4500,000,000

## மொட்டந்தலையர்களின் ..........

1ம் பக்க தொடர்ச்சி

வண்டி மன்கேயிம் எனுமிடத்தல் இருந்து வந்த வழியில் சார்பு றூக்கன் என்ற இடத்தில் குறுக்கே ஒரு உடலைக் கண்டதாகவும் வண்டியை நிறுத்த முடியாது போகவே அவரது காலுக்கு மேலால் வண்டி ஓடிப்போன தாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக எவரும் இன்னும் கைதாகவில்லை என்று அவ்விடத்து பொலிஸார் கூறியுள்ளனர். இது பற்றி பத்திரிகையாளர் ஒருவர் பொலிஸாரிடம் விசாரித்த போது, அவர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பி விடுவார்கள் என்ற பயத்தில் வேண்டுமென்றே இரெயில் பாதையில் படுத்திருக்கலாம் என்றும், கால் போனபடியால் தன்னை இருக்க அனுமதிப்பார்கள் என்று யோசித்திருக்கலாம் என்றும் கூறினார்களாம்.

இந்த இளைஞர் கால் போன நிலையில் தற்போது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## போதைவஸ்த்து கடத்தல்...

3ம் பக்க தொடர்ச்சி

பொலிசார் மேற்கொண்ட விசாரணையின் போது பதிலளித்த சுதன் தாம் கடத்துவதற்கான காரணங்களைக் கூறியுள்ளார். இந்தியாவில் பட்டினியால் வாடும் திசைமாறிப் போன தமது அமைப்பு சகதோழர்களின் வாழ்க்கைச் செலவுகளுக்காகவும் இயக்க ஆயுத சேகரிப்புக்காகவும்தான் இதனைச் செய்ததாக வெளிப்படுத்தியுள்ளார். அபேவுட் (Abbey wood) எனும் இடத்தில் வீடு வைத்திருக்கும் இவர் வேலாயுதம் கணேஸ்வரன் என்பவருடன் வட இலண்டனில் பெற்றோல் நிலைய வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தமையும், பின் அதனை விற்றுவிட்டு செவின் லெவுன் (Seven Eleven) கடை வாங்கியிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

இவரது வழக்கு எப்போது விசாரிக்கப்படும் என்பது தெரியவில்லை.



# கவி அரண்

மலரைப் பறிக்கச் சென்றான்
ஆசையுடன்- அவன்
தைத்தது முள் அவனுக்கு - மனதில்
கசக்கிவிட்டார்கள் அதை - ஒரு
கணத்தில்
நாலு ஆண்டுகள் நாலாயிரம்
யுகங்களாய்
கழிந்தன அவள் நினைவில்
-அவனுக்கு
சாதியிலே பெரியவன் - அவன்
அந்தஸ்தில் உயர்ந்தவள் - அவள்
மனதும் மனதும் மானசீகமாகத்
தழுவின - காதலால்
மனிதன் இட்ட சட்டம்
விடவில்லை - அவனை

* * * * * *

மகா ராணியே
உன் மாளிகைக்கு
வருகின்ற வழி ஏது?
அவசியம் நான் அதை
அறிய வேண்டும்
ஏனென்றால்
என் போன்ற எத்தனை
இதயங்களின்
கால் தடயம் இருக்கின்றது
என்பதை அறிய

* * * * * *

எல்லோரும்
பேசிக் கொண்டார்கள்
என்னைப்பற்றி
என்னோடுதான்
எவளும் பேசவில்லை

* * * * *

பக்கத்து ஊருக்கு
பால் கொடுக்காமல்
நதி நங்கைகளின்
மார்புகளில் முடிச்சுப் போடும்
ஊர் வெறியர்கள் போல்
எனக்கு கடிதம் எழுதாதபடி
உன் மனம்
உன் விரல்களுக்குக்
கட்டுப்போட்டதா

* * * * *

உன்னைப் பார்த்தால்
மட்டுமே மலர்ந்ததொரு
மனம்
உன்னைப் பிரிந்தால்
மட்டுமே
உதிர்ந்து கொண்டு இருக்கின்றது

* * * * * *

மரம் என்றால்
அங்கு மலர் மலர வேண்டும்
மனம் என்றால்
அங்கு காதல் மலர வேண்டும் -
ஆனால்
உன் மனமோ
மலர்ந்தும் மலராத
மலராக உள்ளது - ஏன்
சமுதாய வேலிகள் தடையாக
உள்ளதா?

* * * * * *

பலருக்கு முந்தானை
விரிக்கும் பலரின் முந்தானையில்
படுக்கும் நான் - உன்
முந்தானையில்படுக்க வரவில்லை
உன் மனதில் தவம் செய்ய
விரும்புகின்றேன்
ஏனென்றால்
உன் எழிலில் இல்லை
எளிமையில்

* * * * *

தூயா மாறன்

# தொடரும் கச்சைதீவுப் பிரச்சனை

கச்சதீவை உடனடியாக திரும்பப்பெறுவதற்குரிய நடவடிக்கைளை மேற்கொள்ளும் படி இந்திய மத்தியஅரசை கேட்டு கொள்ளும் பிரேரணை தமிழ்நாடு சட்ட சபையில் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டதையடுத்து கச்சதீவு விவகாரம் ஒரு புதிய திருப்பத்தை அடைந்துள்ளது.

பல ஆண்டுகளாக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் சர்ச்சைகுரிய விடயமாக இருந்து வந்த கச்சதீவு முன்னைநாள் இந்திய பிரதமர் இந்திராகாந்திக்கும் முன்னை நாள் இலங்கை பிரதமர் திருமதி சிறிமாவோபண்டார நாயகாவுக்கும் இடையில் 1974ல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

மனித சஞ்சாரம் இல்லாத சின்னம் சிறிய தீவான கச்சதீவு 120 ஹெக்டேர் விஸ்தீரனமுள்ள நிலப்பரப்பை கொண்டது, இது இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையில் பாக்குநீரினையில் அமைந்துள்ளது. இங்குள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒவ்வொருவருடமும் பங்குனி மாதம் நடைபெறும் உச்சவத்தில் இலங்கை, இந்திய மீனவர்கள் கலந்து கொள்வது தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கமாகும்.

ஆரம்பத்தில் இங்கு செல்வதற்கு கடவுச்சீட்டோ, அனுமதிப்பத்திரமோ தேவைப்படவில்லை யாகினும், பிற்காலங்களில் இலங்கை அரசு கச்சதீவு செல்லும் இலங்கை பிரசைகளிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

கடந்த எட்டு வருடங்களில் 236 தாக்குதல் சம்பவங்கள் இந்திய மீனவர்களிற்கு எதிராக இலங்கை கடற்படையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது, இச்சம்பவங்களில் 50 இற்குமேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டும், 57 இற்கு மேற்பட்டோர் இரத்த காயங்களிற்கும் உள்ளாகியுள்ளனர். மேலும் 205 மீனவ ர்கள் கைதுசெய்யப்பட்டும், 67 இயந்திர படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுமுள்ளதாக தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நடந்ததைப் பார்க்கச் சென்றனர் கடத்திச் செல்லப்பட்டனர்

(வவுனியா)

இரண்டு தமிழ் கல்வி அதிகாரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். கடந்த மாதம் 30ம் திகதியளவில் கடத்திச் செல்லப்பட்ட இவர்கள் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட மோதல்களின் போது பாதிக்கப்பட்ட பாடசாலைகளைப் பார்வையிடச் சென்ற சமயமே கடத்திச் செல்லப்பட்டார்கள். எஸ்.அருளானந்தன், ஏ.பொன்னையா ஆகிய இரு அதிகாரிகளே இவ்வண்ணம் கடத்திச் செல்லப்பட்டவர்கள். இவர்களை மனிதாபிமான முறையிலே விடுவிக்குமாறு வவுனியா நகரமக்கள் புலிகளின் வவுனியாத் தலைமையகத்தைக் கேட்டுள்ளனர்.

## பதிவு செய்யாவிடில் புலியென்று பிடிப்போம்

தென்னிந்தியாவில் தஞ்சமடைந்திருக்கும் ஈழத்தமிழ் பேசும் மக்கள் அனைவரும் அகதிகளாக பதிவு செய்ய வேண்டும் என்று ஜெயலலிதா அரசு அறிவித்திருக்கிறது.

இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் படும் கஸ்டங்கள் சொல்லிலடங்காதவை என்கிறார் ஒரு 70 வது வயது நிரம்பிய ஈழத்தமிழர். இரவு பகலின்றி எந்த நேரத்திலும் வீட்டுக்கு வரும் பொலிசார் பதிவு செய்யாது விட்டால் உங்களைப் புலிகள் வரிசையில் சேர்த்து கைது செய்ய நேரிடும் என்று மிரட்டுகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

ராஜிவ் காந்தியின் கொலையில் ஈழப்போராளிகளுக்குத் தொடர்பிருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம், ஆனால் அப்பாவி மக்களை துன்புறுத்துவது நல்லதல்ல என்று குறிப்பிட்டார் முன்னாள் கூட்டனி எம்.பி இரா.சம்பந்தன்.

## வெட்டிக் கொல்லப்படும் அப்பாவி மக்கள் மட்டுநகர் காணும் நாளாந்தச் செயல்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆங்காங்கே நடைபெறும் முஸ்லிம், தமிழ் மக்கள் குழுக்களுக்கிடையிலான சிறுசிறு மோதல்கள் தினமும் குறைந்தது இருவரினது உயிர்களையாவது பறித்துக் கொண்டிருக்கிறது. அண்மையில் கிணற்றிலிருந்து கண்டெடுத்த ஒரு யுவதியின் உடலில் பல வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. மாறி மாறி சுடுவதும் வெட்டுவதுமாக நடந்து வரும் இச் செயல்கள் இது வரை சுமார் 600க்கும் மேற்பட்ட (இரு சாரரிலும்சேர்த்து) மக்களைப் பலி கொண்டுள்ளது. சரமாரியாகக் குண்டு வீச்சு நீண்ட இடைவெளிக்குப் பின்னர், யாழ் நகரின் பல பாகங்களிலும் அரச விமானங்கள் குண்டு வீச்சு நடாத்தின. சங்குப்பிட்டி, பூநகரி, நல்லூர் மற்றும் புன்னாலைக் கட்டுவான் பகுதிகள் மீது தொடர்ச்சியாக அரச பயங்கரவாத இராணுவம் நடாத்திய குண்டு வீச்சினால் ஒருவர் கொல்லப்பட்டதோடு எட்டுப்பேர் காயமடைந்தனர். காயமடைந்தோர் உடனடியாக யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதே வேளை காரைநகரில் இருந்து யாழ் குடா நாட்டை நோக்கி சரமாரியான செல்தாக்குதல்கள் நடந்தது. சேத விபரம் கிடைக்கவில்லை.

## தடைசெய்யப்பட்ட பொருட்களை எடுத்துச் சென்ற இருவர் கைது

ரோச் லைற்றுக்கான பற்றிகளை தமது சொந்தப் பாவனைக்காக வாங்கிச் சென்ற இரு வவுனியா வாசிகள் தாண்டிக்குளம் பகுதியிலுள்ள பரிசோதனை நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இச் சமயம் இவர்கள் அன்றாட தெவைகளுக்காக வாங்கிச் சென்ற பொருட்களையும் பறிமுதல் செய்துள்ளனர். இவர்கள் பற்றிய எந்த விபரமும் இவர்களுடைய உறவினர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை.

## மட்டுநகர் வைத்தியசாலையில் மருந்துத்தட்டுப்பாடு

ஒக்ஸிஜன் சிலிண்டர்கள் இல்லாமையினாலும், எக்ஸ்றே உபகரணங்கள் பற்றாக்குறையினாலும் அண்மைக்காலமாக எதுவித சத்திர சிகிச்சைகளும் நடைபெறவில்லை என்று மட்டக்களப்பில் இருந்துவரும் செய்திகள் கூறுகின்றன. மட்டுநகர் ஆதார வைத்தியசாலையுடன் கூடிய இதர ஆஸ்பத்திரிகளுக்கும் சேர்த்து ஒரே ஒரு அம்புலன்ஸ் மட்டுமே சேவையிலுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## 300 இளைஞர்கள் மஹஷின் சிறையில்

அண்மையில் கொழும்பு வெலிக்கடையிலுள்ள மஹஷின் சிறையில் அடைத்துவைத் திருக்கும் கைதிகளைப் பார்வையிடச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். அங்கத்தவர்கள் கொண்ட குழு ஒன்று விட்ட அறிக்கையின் பிரகாரம் சுமார் முன்னூறு தமிழ்பேசும் இளைஞர்கள் காரணமின்றி அடைத்துவைக்கப் பட்டுள்ளார்கள் என்பது தெரிய வந்துள்ளது. 50 முஸ்லிம் தமிழ்பேசும் கைதிகள் உட்பட சிறைவைக்கப்பட்டிருக்கும் இவர்களில் பலருக்கு அவர்களது உரவினர்கள் சென்று பார்வையிடுவதற்கு கூட அனுமதி வழங்கப்படவில்லை என்று அந்த அறிக்கை தெரிவிக்கின்றது. உணவு, சுகாதார வசதிகள் அற்ற நிலையில் வழக்குத் தொடரப் படாது காலவரையின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று இக்குழுவினர் ஸ்ரீ லங்கா அரசைக் கேட்டுக்கொண்டதாக வேறொரு செய்தி தெரிவிக்கின்றது.

## தெற்கில் மீண்டும் ஜே.வி.பி

(மாத்தறை)

இன்றைய அரசியல் குழப்பத்தைச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தெற்கில் மறைந்திருந்த ஜே.வி.பியினர் மீண்டும் தலை தூக்கியுள்ளனர். திக்குவல்லை பொலிஸ் பகுதியில் உள்ள நாவரஹேன என்ற இடத்தில் ஜே.வி.பியினரின் சுவரொட்டிகளை மீண்டும் காணக்கூடியதாக இருக்கின்றதென அறியப்படுகிறது.

"மீண்டும் எமது போராட்டத்தை தொடருவோம்" "மக்களுக்கு விடுதலை விமோசனம் என்பவற்றை பெற்றுத்தருவோம்" என்ற வாசகங்கள் இவற்றில் காணப்படுகின்றதாகவும் பொலிஸார் இவற்றை அகற்றுவதில் ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பத்தாயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் அகதி முகாம்களில்

(யாழ் நிருபர்)

யாழ்ப்பான மாவட்டத்தில் 14 மாதங்களாக 10436 குடும்பங்கள் 157 அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கிறார்கள் என்று செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய மதிப்பீட்டில் இருந்து தெரியவருகிறது. அவர்களுடன் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களும் இங்குள்ள அகதி முகாம்களில் காணப்படுகின்றார்கள். இவர்களையும் சேர்த்துக் கணக்கிடும்போது 42 ஆயிரம் குடும்பங்கள் வரையில் அகதிகளாக இருக்கிறார்கள். இவர்களின் புணர்வாழ்வு நடவடிக்கைகளில் செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகிறது.

# செய்திச் சுருக்கம்

## சரமாரியாகக் குண்டுவீச்சு

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ் நகரின் பல பாகங்களிலும் அரச விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின. சங்குப்பிட்டி, பூநகரி மற்றும் புன்னாலைக் கட்டுவன் பகுதிகள் மீது தொடர்ச்சியாக அரச பயங்கரவாத இராணுவம் நடாத்திய குண்டு வீச்சினால் ஒருவர் கொல்லப்பட்டதோடு எட்டுப்பேர் காயமடைந்தனர். காயமடைந்தோர் உடனடியாக யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். - இதே வேளை காரைநகரில் இருந்து யாழ் குடாநாட்டை நோக்கிச் சரமாரியான செல் தாக்குதல் நடந்தது. இதனால் ஏற்பட்ட சேத விபரம் இன்னும் கிடைக்கவில்லை.

## புலிகளின் ஆதரவாளர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதாவர்

தமிழகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்கு



தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இத்தடையை மீறி ஊர்வலம், கூட்டம் நடத்துவோர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்படுவார்களென தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா எச்சரித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு நல்கும் சக்திகளுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முதல்வர் சொன்னார்.

மாநில சட்டபேரவையில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இந்த எச்சரிக்கையை விடுத்தார். அத்துடன் மதுரை விருந்தினர் விடுதியொன்றில் கூடிய கூட்டம் ஒன்றில், அமரர் ராஜீவ் காந்திபற்றி தரக்குறைவாக பேசியது தொடர்பாக மதுரை மாநகர காவல்துறை ஆணையாளரிடம் அறிக்கை கேட்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மக்கள் இலங்கையில் இறக்கும் கட்டம் கார்த்திகையில் வருகிறது வரவு செலவு திட்டம்

ஸ்ரீ லங்காவின் 1992 விற்கான வரவு செலவு திட்டமானது கார்த்திகை மாதம் இரண்டாம் கிழமையளவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. லட்சக்கணக்கான மக்கள் பட்டினியில் சாக, பொதுநலச் சேவைகள் சிதம்பிப்போய் கிடக்க மீண்டும் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையானது என்றுமில்லாதவாறு அதிகரித்திருக்கிறது. 15,249,976,000 ரூபாய்களை பாதுகாப்புக்கென

தொடர்ச்சி 9ம் பக்கம்

## 20,000 தமிழர்கள் சுவிஸில்! அனுப்ப நினைக்கிறோம் என்கிறார் வெளிநாட்டு அமைச்சர்

(இந்தியா)

அண்ணளவாக 20,000 இலங்கைத் தமிழர்கள் சுவிஸ்லாந்தில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர் என்று அண்மையில் வெளிவந்த பத்திரிகை செய்தி ஒன்று கூறுகின்றது. சுவிஸ்லாந்து துணை ஜானாதிபதியும் வெளிநாட்டு மந்திரியுமான றேன் பெல்பர் அவர்கள் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். குறைந்தளவு பேர்களுக்கு மாத்திரமே அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டதாக குறிப்பிட்ட இவர், மற்றையோர் அகதிமுகாம்களில் சுவிஸ் அரசு பொறுப்பில் கவனிக்கப்பட்டு வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான பிரிவின் அனுசரணையுடன் இவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்பப் போவதாகவும் ஆனால், தற்போது நடைபெறும் இரு இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளின் நிமித்தம் இந்த எண்ணத்தை தற்போதைக்கு கைவிட்டுள்ளதாகவும் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளிக்கையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் கூறியதாவது; "தமிழ்அகதிகள் எமது நாட்டுக்கு எந்தப் பிரச்சினைகளையும் தராது எம் நாட்டு மக்களுடன் அமைதியாகவே வாழுகிறார்கள். ஆனாலும் சிலர் போதைவஸ்து கடத்துவதிலும் அரசியல் வேலைகளில் ஈடுபடுவதன் மூலமும் வரவேற்ற நாட்டுக்கு துரோகம் இழைக்கிறார்கள் என்றார்.


Global Printers

164A, (Rear) Mitcham Road,
Tooting,
London SW17 9NJ.
Tel: 081-767 8895

We Undertake the following work at reasonable rates:

PRINTING - SINGLE AND MULTI COLOUR
TAMIL & ENGLISH

Letter Heads, Business Cards,
Compliment Slips, Invoices.
Wedding Cards, Invitation Cards.
Leaflets, Posters, Tickets.

Global Printers

For prompt service at reasonable rates
call us on 081-767 8895

OPEN SEVEN DAYS A WEEK
FROM 10.00a.m. to 5.00p.m.